பூர்ணசந்திரோதயம்.

தொகுதி 5.	1914௵ மே௴ 15உ ஆநந்த௵ வைகாசி௴ 2உ	பகுதி 1

தற்கால நிலைமை.

சென்ற ஏப்ரல் 10, 11, 12உ களில் தஞ்சாவூரில் பிரஹ்மக்ஞான கிளைச் சங்கங்களின் மஹா ஸபை (Theosophical Conference), ஜனாசார சீர்திருத்த ஸபை (Social Conference) ராஜாங்க ஸம்பந்தமான விஷயங்கள் பற்றிய மஹா ஸபை (Political Conference) ஆக மூன்று ஸபைகள் கூடின. அவை ஒவ்வொன்றிற்கும் முறையே மாதாஸ்ரீ அன்னிபெஸண்டு அம்மையார், கனம் ஸர். ஸி. சங்கரன் நாயரவர்கள், கனம் கே. ராம ஐயங்காரவர்கள் அக்ராஸநம் வகித்தார்கள். இவைகள் தஞ்சாவூரில் பெஸண்டுஹால் என்ற பிரஹ்மக்ஞான மந்திரத்தில் நடத்தப் பெற்றன. பிரஹ்மக்ஞான ஸபையானது மனிதனுடைய ஆத்மார்த்தத்தைப் பற்றிய விஷயங்களை முக்கியமாகவும், மற்றைய விஷயங்களை அங்கங்களாகவும் கொள்ளுகின்றது. ஆகவே ஜனாசார சீர்திருத்த ஸபை ஜனங்களுடைய ஜாதி, மதம், விவாஹம், கல்வி முதலிய விஷயங்களைப் பற்றி வியவஹரிக்க

வும், ராஜரீக விஷய விசார ஸபை ஜநங்களின் பொதுநன்மை, அவர்களுடைய ஐசுவரியாபிவிருத்தி, அவர்களின் குறைகளுக்கு நிவிர்த்தி யுபாயங்கள், ஜநங்களுக்கும், இராஜாங்கத்திற்கும் உள்ள ஸம்பந்தம் ஆகிய இவைகளைப் பற்றி வியவஹரிக்கவும் பரியாலோசனை செய்யவும் பிரயோஜநகரமா யிருப்பன வாதலால், பிரஹ்மக் ஞான ஸபையைப் போலவே இவ்விரண்டு ஸபைகளும், ஆக மூன்றும் ஒரு ஜில்லாவிலுள்ள ஜனங்களின் க்ஷேமத்திற்கு இன்றியமையாதவைகள்.

***

பிரஹ்மக்ஞான சபையானது மதத்துவேஷமின்றி ஒவ்வொரு மதத்தின் உண்மைகளையும் அறிய விரும்புதலாலும், உலகத்தில்தற்காலத்தில் பிரபலமாய் வழங்கி வருகிற பிரதான மதங்கள் ரிஷிகளாலும், விகாஸ முறையில் உயர்ந்தோர்களாலும் பல வேறு வகுப்பினர்களுக்கு அவரவர்களுடைய பக்குவ நிலைக்குத் தக்கவாறு கொடுக்கப்பட்டன வென்று கொள்ளுதலாலும், அம் மதங்களின் தத்துவார்த்தங்கள் ஒன்றோடொன்று ஒத்திருக்கின்றன வென்று வெளிப்படுத்துதலாலும், அது எல்லோருக்கும் பொதுவாயுள்ளது. ஆகையால் ஜனங்களின் பொது நன்மையைச் சார்ந்த எவ் விஷயத்தையும் பிரஹ்மக்ஞான ஸபையும் அதின் அங்கத்தினர்களும் ஆதரிக்கவேண்டுமென்றும், பிரஹ்மக் ஞான ஸபையி லுள்ளோர்கள் மதம், ஆசாரம், ராஜாங்க வியவஹாரங்கள் இவ் விஷயங்களில் தத்தம் அபிப்பிராயங்களை வகிக்க பாத்தியமுள்ளவர்களாயினும், அந்தந்த தேசத்தில் ஜனங்களுடைய இஹபர லௌகிக வைதிக க்ஷேமங்களைக் கருதும் முயற்சிகளி லெல்லாம் முயன்று வருவது அவர்கள் கடமை யென்றும் மாது ஸ்ரீ அன்னி பெஸண்டு அம்மையார் எடுத்துக் கூறினர். அவர்கள் ஐக்கிய இந்திய தேசம் (United India) என்ற விஷயத்தை உபந்யஸித்தார்.

***

ஆசார சீர்திருத்த ஸபையின் அக்கிராஸனம் வகித்த கனம் ஸி. சங்கரன் நாயரவர்கள், ஆசார சீர்திருத்தத்திற்கும் ஹிந்து மதத்திற்கும் யாதொரு விரோதமுமில்லை யென்றும், இந்து மதமானது

ஆசார சீர்திருத்தத்திற்கு அநுகூலமாக விருப்பின் நமக்குத் தீங்கை விளைவிக்கும் ஆசாரக் குறைவுகள் சுலபமாய் நிவிர்த்திக்கப்படுமென்றும், அக் குறைவுகளினால் கிறிஸ்துவ பாதிரிமார்கள் இந்துமதஸ்தர்களைத் தங்கள்மதங்களிலே சேர்த்துக்கொள்ளுவதற்கு ஏற்ற ஸாதகங்கள் ஏற்படுகின்றன வென்றும், மேல் ஜாதியோர் கீழ் ஜாதியோரை அன்புடன் பாராட்டி சுய நன்மையைக் கருதாமல், பொது நன்மையை நாடினால் நமது தேசம் க்ஷேமத்தை யடைந்து ராஜாங்கத்தாரிடமிருந்து 'Representative Institution' என்ற ஜநப்பிரதிநிதிகளின் ஆளுகைகளை பல விஷயங்களில் அடையலாமென்றும், ஜாதி, மதத் துவேஷ மிருக்கும்போது அவ்வித இராஜாங்க சீர்திருத்தங்களைக் கேட்பின், பொது ஜன க்ஷேமத்தின் பொருட்டும், கீழ் அந்தஸ்துள்ளவர்கள் மேல் அந்தஸ்துள்ளவர்களால் பாதிக்கப்படாமலிருக்கும் பொருட்டும் அவை கொடுக்கத்தக்கனவல்லவென்றும் கவர்ன்மெண்டார் சொல்வதாயும், அவ்விதமாக பப்ளிக் ஸர்விஸ் கம்மிஷன் (Public Service commision) முன்னர் ஐரோப்பிய உத்தியோகஸ்தர்களுடைய ஸாக்ஷ்யமும் ஏற்பட்டதென்றும், அதை மறுக்க எந்த இந்திய ஸாக்ஷியும் துணிவில்லை யென்றும் அவருடைய உபந்யாஸத்தில் கூறினார்.

* * *

இராஜாங்க விஷய விசாரசபையின் அக்கிராசனம் வகித்தகனம் கே. ராம ஐயங்காரவர்கள் அவருடைய உபந்யாஸத்தில் கிராமத்தில் பொது நன்மைக்காக ஏற்படும் முயற்சிகளைப் பலப்படுத்த வேண்டுமென்றும், முன் காலத்தில் கிராமங்களில் பஞ்சாயத்துக்கள் ஏற்பட்டு பொது விஷயங்கள் கவனிக்கப்பட்டு வந்தபடியால் தேசம் க்ஷேமத்தை யடைந்து வந்ததென்றும், தற்காலத்தில் கிராமங்களிலிருந்து ஜனங்கள் பட்டணங்களை நோக்கிச் செல்லுகிறபடியால் கிராமங்கள் க்ஷீணதசையை அடைந்திருக்கின்றன வென்றும், நாம் முன்னுக்கு வர வேண்டுமென்றால் கிராமத்திலுள்ளவர்கள் ஒன்று சேர்ந்து அவர்கள் சாகுபடி செய்கிற தானியம் முதலான சாமான்களை சரியான லாபத்தின் பேரில் விற்பனை செய்வதற்காக (Co-operative Stores) என்ற ஐக்கிய பண்டக சாலைகளை கிராமங்கள் தோறும்

உற்பத்தி செய்ய வேண்டுமென்றும், அவ்விதமாகவே அவர்களுக்கு விவசாயத் தொழில்களுக்குத் தேவையான சாமான்களைக் கொள் முதல் செய்வதற்கு அற்ப வட்டியின்பேரில் கடன் வாங்க (Co-operative Credit Society) என்ற ஐக்கிய நாணய சங்கங்கள் கிராமந் தோறும் இருக்கவேண்டுமென்றும், கிராமங்களில் சுகாதாரவிதிகளுக்கு விரோதமாய் கிராமவாசிகள் நடவாமலும் விவகாரங்களினால் மிகச்செலவு நேரிட்டு குடிகெட்டுப் போகாமல் அந்தந்த ஊர்களில் நேரும் விவகாரங்கள் அந்தந்த ஊரில் நியாயமாய்த் தீர்மானிக்கவும் பஞ்சாயத்துக்கள் ஏற்பட வேண்டுமென்றும் சொல்லினர்.

***

அடையாற்றில் ஏப்ரல்மீ 10, 11, 12, 13உ களில் தென் இந்தியா பிரஹ்மக்ஞான சபை (South Indian Convention) முதல் முதலாகக் கூடிற்று. அக்கூட்டத்திற்கு சென்னை ராஜதானியின் பல ஜில்லாக்களிலிருந்து பிரதிநிதிகள் வந்து சேர்ந்தனர். 11உ மாலையில் கனம் ஸி. ஜினராஜதாஸர் ப்லேடோ (Plato) என்ற கியாதி பெற்ற தத்துவ சாஸ்திரியின் தத்துவ சாஸ்திரத்தைக் குறித்து ஆழ்ந்த விசாரணையைக் காட்டத்தக்க ஒரு பிரசங்கம் செய்தனர். அந்தத் தத்துவ திரத்தின் தாத்பரியத்தைச் சுலபத்தில் தெரிதல் அரிது. வேதாந்தத்தில் பிரஹ்மத்தை சச்சிதானந்தம் என்று சொல்வதுபோல இந்த கிரேக்கு தேசத்து தத்துவசாஸ்திரியானவர் பிரஹ்மத்தை நல்லதென்றும் சத்தியமென்றும் சௌந்தரியமென்றும் கூறினர். ஈசுவரனுடைய சௌந்தரியமானது உலகத்தில் ஈசுவர சிருஷ்டியிலெல்லாம் இருக்கிறதென்றும் அந்த அழகை நாம் தெரிந்து ஈசுவரனை வழிபடலாமென்றும் அவருடைய கிரந்தங்களில் வற்புறுத்தியிருக்கின்றனர். இந்த ஸ்தூல லோகங்களில் உள்ள வஸ்துக்களுக்கு ஆதாரபூதமாக சூக்ஷ்ம லோகங்களில் எண்ணங்கள் (Ideas) ஆகிற சங்கற்பங்கள் உண்டென்பது அவருடைய தத்துவ சாஸ்திரத்தின்முக்கிய கொள்கையாகும். இது நம்முடைய பிராசீன உபநிஷத்துக்களில் ஈசுவர சங்கற்பமே உலகங்களாகும் என்று கூறப்படுவதற்கு ஒத்திருக்கிறது.

***

மறுநாள் சாயங்காலம் மாதுஸ்ரீ அன்னிபெஸண்டு அம்மையார் கர்மயோகம் ((Spirituality and Activity) என்கிற விஷயத்தைக் குறித்து உபந்நியாசம் செய்தனர். ஒருவன் தன்னுடைய சுய நன்மையை நாடி ஸம்ஸார சக்கரத்தினின்றும் விடுபடுவதற்கு முயலலாம் அப்படி முயலுதல் சுய காரியத்தை நாடுதலேயாகும். முற்காலத்தில் இவ்வாறான விபரீதக் கொள்கை அங்கீகரிக்கப்படவில்லை. ஒருவன் முக்தியையடைய விரும்பினால் அவன் பந்தத்தினின்றும் விடுபட்டு தனிமையாகச் சென்று சுகத்திலிருக்க விரும்பினவனன்று. அவன் இந்த ஸம்ஸாரம் என்ற பஹிர் நிர்ப்பந்தத்தினின்று விடுபட்டு தன்னுடைய கருணை என்ற உள் நின்று பெருகும் வெள்ளத்தினால் உலகத்தில் தனக்கு ஆக வேண்டுவது யாதொன்றும் இலதாயினும் உலகத்தோரின் க்ஷேமத்தைக் கருதி அவர்களிடத்தில் நின்று அவர்களுக்கு உதவி புரிவதையே முக்கியமாகக் கருதுகிறான். இப்பேர்ப்பட்டவர்கள் ரிஷிகள் மனுக்கள் முதலாயினோர். ஆகையால் தான் இந்து மதத்தில் லௌகிக பிரவிர்த்திகளுக்கும் வைதிக பிரவிர்த்திகளுக்கும் வித்தியாசம் பாராட்டப்படவில்லை. எத்தொழிலைச் செய்யினும் ஈசுவரன் தொழிலைச் செய்கிறதாகவே நினைத்துச் செய்தல் உத்தம கதியைக் கொடுக்கின்றது.

*
* *

ஆகையால் பொது நன்மையைக் கோரும் வழிகளில் வேலை செய்வோர்களில் பலர் பிரஹ்மக்ஞான சபையைச் சேர்ந்தவர்களாயிருக்கின்றனர். ஆகையால் இந்தியா தற்காலத்தில் இருக்கும் ஸ்திதியைக் கவனித்தும் இனி வருங்காலத்தில் இந்தத் தேசம் அடையப் போகின்ற தசையைத் தெரிந்துகொண்டும் அதற்குத் தக்கவாறு நாம் முயல வேண்டும். இந்தத் தேசத்திலிருக்கும் சுமார் 30 கோடி ஜனங்களில் 6 கோடி ஜனங்கள் அக்ஞானத்தில் அமிழ்ந்திருக்கிற பஞ்சமர்களாகவும் பாமரர்களாகவுமிருக்கின்றனர். 6 கோடி ஜனங்கள் இக்கீழான ஸ்திதியிலிருக்க இத்தேசம் உன்னத ஸ்திதியை அடையவேண்டுமென்று நினைத்தல் சாத்தியமன்று. இவ்வெண்ணத்தை நிறைவேற்றுமுன் அவ்வாறு கோடி ஜனங்களுக்கும் விவேகத்தைக் கொடுத்து அவர்களையும் கூடக் கூட்டிச்செல்லுதல் வேண்டும். அதற்குத் தக்கவாறு உழைத்தால் மட்டில் இத்தேசத்தின்

சீர்திருத்தம் கைகூடும். அதுபோல் இத்தேசத்தின் மொத்த ஜனங்களில் ஒரு பாதி ஸ்திரீகளாகும். அவர்களுடைய அபிவிருத்தியைக்குறித்து இதுவரையில் கவனித்ததைக் காட்டிலும் இனியாவது அதிகமாகக் கவனித்து அதற்குத் தக்கவாறு முயற்சித்தால் மட்டும் தேசாபிவிருத்தி அதிகரிக்கும்.

*
* *

இந்தியா சட்ட நிரூப்பண சபையில் ஜனங்களுடைய பிரதிநிதிகளை ஆதரிக்கத்தக்க பலமான பொதுஜன அபிப்பிராயம் (Public Opinion) பின்னிற்கவேண்டும். அவ்வித பொதுஜன அபிப்பிராயம் ஏற்பட்டு பலப்பட்டாலொழிய சீர்திருத்தங்கள் ஏற்படமாட்டா. கவர்ன்மெண்டாரும் இவ்வித விவேகமுள்ள பொதுஜன அபிப்பிராயம் ஏற்பட்டாலொழிய சீர்திருத்தங்களைச் செய்யத் துணியூர்கள். அபிப்பிராய பேதங்களோடு பொருந்திய Age of Consent என்ற பெண்களின் சம்மதி வயதானது அதிகரிக்கப்படவேண்டும். 18 வயதுக்குட்பட்ட பெண் அவளுடைய நகைகளை விற்கப் பாத்தியமில்லை. நகைகளைக்காட்டிலும் விலை மதிக்கக்கூடாத மானத்தை இப்போதிருக்கிற சட்ட நிலைமையில் அப்பெண் கைவிடச் சம்மதிக்கலாம். அச்சம்மதி வயதை 16 வரை உயர்த்த நாம் வேலைசெய்யவேண்டும். இந்த தேசத்தின் அபிவிருத்தியில் ஊக்கமாக ரிஷிகள் உழைக்கிறார்களென்று நாம் நம்புகின்றோம். அப்படி ஒப்புக்கொண்டால் நாமும் அவ்வாறு கைங்கரியம் புரியவேண்டும் என்று உபந்நியாசம் செய்து முடித்தனர்.

*
* *

சென்றமீ 11, 12 தேதிகளில் பெஜவாடா என்னும் பட்டணத்தில் இரண்டாவது ஆந்த்ர சபையானது கூடிற்று. அதற்கு Mr. N. சுப்பராவ் பந்துலுகாரு அக்கிராஸனாதிபதியாக விளங்கினர். அந்தச் சபையோர்கள் தீர்மானித்த பிரகாரம் தெலுங்கு ஜில்லாக்களை பிரத்தியேகப்படுத்தி ஒரு மாகாணம் அல்லது ராஜதானியாக்கி அதற்குப் பிரத்தியேக ஆளுகையை உண்டுபண்ணவேண்டும் என்பதும் தெலுங்கு ஜில்லாக்களுக்காக பிரத்தியேக சர்வகலாசாலை (University) ஏற்படுத்தவேண்டும் என்பதும் அவசியமா என்ற விஷயத்தைக்

குறித்து அபிப்பிராய பேதங்கள் பலவாறு யிருப்பினும் அந்த சபை யானது தெலுங்கு பேசப்படும் ஜில்லாக்களில் பொது நன்மையை விளைவிக்கும் முயற்சிகளில் ஜனங்களுக்கு உற்சாகத்தைக் கொடுக்கத் தக்கதென்றும் பலஜாதி வைஷம்யத்தினால் வெவ்வேறாகப் பிரிக்கப் பட்டிருப்பவர்களுக்குள் ஒரு பாஷையைப் பேசும் பாந்தவ்யத்தினால் ஐக்கிய பாவத்தை அதிகரிக்கத்தக்கதென்றும் அதின் சென்ற 2 வருஷ சரித்திரத்தினால் நன்கு விளங்குகின்றது. தெலுங்கு ஜில்லா வாசிகள் தமிழ் ஜில்லா வாசிகளைக்காட்டிலும் தற்காலத்தில் அதிதீவிர மாயும் ஊக்கத்துடனும் ஒற்றுமையுடனும் பொதுக்காரியங்களில் உழைத்து வருகின்றனர்.

* * *

Mr. G. நாராயணய்யாவின் குமாரர்கள் விஷயமாய் சென்னை ஐக்கோர்ட்டு அப்பீல் வகுப்பில் மாது ஸ்ரீ அன்னிபெஸண்டு அம்மையாருக்கு விரோதமாய்ச் செய்ததீர்மானத்தின்பேரில் பிரிவி கவுன்ஸிலில் அவர்கள் அப்பீல் செய்திருந்ததில் அந்த அப்பீலில் ஐக்கோர்ட்டுத் தீர்மானத்தை மாற்றியிருக்கிறார்களென்று தந்தி வந்ததைப் பார்க்கச் சந்தோஷமாயிற்று. பிரஹ்மக்ஞான சபையும் மாதுஸ்ரீ அன்னிபெஸண்டு அம்மையாரும் இந்தியாவுக்கு கைங்கரியம் புரியக் கட்டுப்பட்டவர்களாயிருக்க அவர்களின்பேரில் ஒரு காரணமில்லாத த்வேஷத்தை வைத்து சிலர்கள் அவர்களுக்குக் கெடுதியுண்டு பண்ணலாமென்ற துர் எண்ணம் கொண்டு Mr. G. நாராயணய்யாவை கோர்ட்டில் விவகாரம் செய்யத்தூண்டிவிட்டு அவ்விவகாரம் கடைசியில் வியர்த்தமாய்ப்போய், Mr. G. நாராயணய்யாவுக்குப் பணச்செலவையும் அவரைத் தூண்டினவர்களுக்கு ஒரு அபக்கியாதியையும் உண்டுபண்ணினதைத்தவிர வேறு பிரயோஜனத்தைக் கொடுக்கவில்லை. இவ்விஷயத்தை அவர்கள் நன்குணர்ந்து இனியாவது இத்த்வேஷ மார்க்கத்தில் செல்லமாட்டார்களென்று நாம் நம்புகிறோம்.

அ. ரங்கஸ்வாமி ஐயர்.

The Theosophist in India.

There are some things that Theosophists can do in India which will at once serve the country and serve the Theosophical Society, and it is to these that I would specially draw the attention of the Fellows of the T. S. For unless beliefs are put into practice they are useless nay, they are worse than useless, for they tend, in such case, to harden the heart and to poison the life with hypocrisy.

The first duty that we all owe to the Society is to lead a noble life, and to set an inspiring example of brotherliness and of selfless service to all around us. To be true, to be pure, to be useful—such is our duty.

Truth implies that our beliefs shall be carried out into action. The virtues that we meditate on we must practice. We must make no promise that we do not keep; we must raise no hopes that we do not try to fulfil, we must offer no excuse which is not rigidly exact. The desire to please others—in itself a gracious and right desire—sometimes passes into promising something which we do not perform, and thus we fail in truth; how often, for instance, a subscription is promised, but not paid. The word of the Theosophist should never be broken. Truth in thought, in speech, in action, is the foundation of noble character, and the characteristic Aryan virtue. It is written that "Brahman is Truth," and we, in whom Brahman lives, must show forth His nature.

Purity implies that no evil thought, no evil desire shall be allowed to remain in mind and heart, that no evil word shall ever pass the lips. If the mind and the desire-nature are carefully guarded from all impurity, speech will never be unclean or coarse. Many will find that impure thoughts and desires suggest themselves, "come into the mind," as we say. If that should happen, we must promptly turn them out by thinking of some pure ideal, repeating some noble *shloka*, occupying the

mind with a good and inspiring thought. The empty unguarded mind is like an empty house with open doors—any vagrant can enter and lodge there. But every man should keep a good thought as the door-keeper of his mind, and then no evil thoughts will be allowed to enter.

Usefulness implies that we recognise our duties to those around us, and try to carry them out faithfully and well. The useful man is the man who, as he goes about in the world, looks for opportunities of helping others. He does not wait to be asked for help—he offers it. His ability to serve is the only limit of his service. There are many wrongs about us that we cannot right, there are many hungry whom we cannot feed, there are many poor whom we cannot help. But let us see to it that all help which is not given is help which we are unable to give and not help which we carelessly refuse. If each Theosophist would do a little helpful work every day, he would lighten the burden lying on others.

Usefulness should begin in the home, and spread from the home outwards. Those who come in our way are those whom we should first try to help. Then we should look around us, and see what good causes in our neighbourhood are in need of workers. There may be a Panchama School which would be glad of an evening a week; there may be a girls' school which wants funds, which we can help to collect; there may be some social or political reform which we think good, and which we can actively serve. Each man must choose for himself *what* he will help; but, if he be a true Theosophist, he will help *something*.

India needs, more than anything else, the spirit of unselfish service, of single-eyed devotion to the public good. So many work with one eye turned towards Government approval, towards the hope of a title, towards some personal advantage, or personal gain. A saint once asked. "Who is there who will serve God for naught?" We may ask to-day: "Who is there who will serve India for naught?" Let every true Theosophist answer "I will."

Annie Besant.

இந்தியாவில் உள்ள பிரஹ்மக்ஞான சங்கத்தார்க்கு ஓர் வேண்டுகோள்*

எக்காலத்தில் பிரஹ்மக்ஞான சபைக்கும் நம் தாய் நாட்டிற்கும் நன்மை பயக்கக்கூடிய விஷயங்கள் சில உள. இவ்விஷயங்களில் தான் தம் கவனத்தையும் கருத்தையும் செலுத்த வேண்டுமென்று பிரஹ்மக்ஞான சங்கத்தாரை வேண்டுகிறேன். உண்மையென நாம் நம்பியுள்ள விஷயங்களை அனுஷ்டானத்திற்குக் கொண்டு வராவிடில் அவற்றால் எப்பயனும் இல்லை. இம்மட்டோ? அவை அநர்த்தத்திற்கும் காரணமாகும். ஏனெனில், அப்போது அவை நம்மைக் கடினசித்தராக்கியும், நம் வாழ்நாட்களையே வஞ்சகத்தால் படு விஷம்போல் பாழ்படுத்தியும் விடுகின்றன.

நம் வாழ்நாளைக் கௌரவமாகக் கழிப்பதும், நம்மைச் சுற்றினுமுள்ள சகலரிடத்திலும், நம் நன் மாதிரியை முன் மாதிரியாக யாவரும் பின்பற்றும்படி சகோதரத்வத்துடன், தன்னயம் கருதாது அவர்கள் பொருட்டுழைப்பதுமே நாம் யாவரும் சங்கத்திற்குச் செய்ய வேண்டிய முதற் கடமையாகும். வாய்மை, தூய்மை, பரோபகாரம்—இவைகளே நம் கடமை.

உண்மையென நாம் நம்பிய விஷயங்களை அனுஷ்டானத்திற்குக் கொண்டுவரவேண்டும் என்பதை "வாய்மை" குறிக்கும். நாம் சிந்திக்கும் நல்லறங்களை அனுஷ்டித்தே தீரவேண்டும். நம்மால் நிறைவேற்ற முடியாத எதனையும் செய்து விடுவதாக உறுதிமொழி கூறக்கூடாது. நாம் சாதிக்க முடியாத விஷயங்களில் எவர்க்கும் நம்பிக்கை பிறப்பிக்கலாகாது. யதார்த்தத்தையே தவிர வேறு சாக்குப் போக்கு எதுவும் கண்டிப்பாய்க் கூறக்கூடாது. பிறரைச் சந்தோஷப் படுத்த வேண்டுமென்பது, கருணையைக் காட்டக்கூடியதும், அதியுக்தமானதுமான விருப்பம் என்பதில் ஐயமில்லை. ஆயினும் சில வேளைகளில், நாம் நிறை வேற்றா ஒன்றைப் பற்றி வாக்குறுதி செய்வதாகவே அது ஆகிவிடுகிறது. ஆகவே, நாம் சித்தியம்

* Translated by M Gopalakrishna Iyer Esq., President, Manavar Sentamil Sangam, Madura.

தவறியவர் ஆகி விடுகிறோம். உதாரணமாக:—தருவதாக ஒப்புக் கொண்டு ஒப்பமிட்ட சந்தாத் தொகை எத்தனை தடவை கொடுபடாமலே போய் இருக்கிறது! பிரஹ்மக்ஞான சங்கத்தாரின் வாக்கு எக்காலத்தும் பொய்க்கக் கூடாது. மனம், வாக்கு, கிரியை இவற்றில் உண்மையாக இருத்தலே நல்லொழுக்கத்திற்கு மூலமாகும், ஆரிய லக்ஷணமும் அதுவே. "ஸர்வேச்வரனே ஸத்யஸ்வரூபி" என்று எழுதப்பட்டுள்ளது. அவர் திருக்கோயில் கொண்டெழுந்தருளிய ஸ்தானமாகிய நாமும் அவரது நல்லியற்கையையே வெளிக்காட்டவேண்டும்.

துர் எண்ணமும் துராசையும் மனத்திலும் இருதயத்திலும் தங்க இடம் தரக்கூடா தென்பதையும், துர்வார்த்தை ஏதும் வாயினின்றும் வெளிவராமல் அதனைத் தடுக்க வேண்டு மென்பதையும் "தூய்மை" குறிக்கும். மனமும் ஆசைக்கு இடந்தரும் ஸ்வபாவமும், எவ்வகைத் தீமையும் அணுகா வண்ணம் காக்கப்படுமாயின் இழி சொற்களும் துர்வார்த்தைகளும் தோன்றா. துரெண்ணங்களும் துராசைகளும் "தாமாகவந்து தோன்றுவதை" அநேகர் உணர்வர். அவ்வாறு அவை வந்து தோன்றுமாயின், அச்சமயம் சில நல் விஷயங்களைச் சிந்தித்தும், புண்ணிய சுலோகங்களைப் பாராயணம் செய்தும், மனவெழுச்சி மேலிடக் கூடிய நல்லெண்ணங்களை மனத்திலிருத்தியும், அத்தீய எண்ணங்களையும் ஆசைகளையும் உடனுக்குடனேயே ஓட்டி விடவேண்டும். அடக்கமும் அறிவுமற்ற மனத்தை, நாடோடிகள் எவரும் நுழையக்கூடிய ஓர் திறந்த குடியில்லா வீட்டிற்கு ஒப்பாகக் கூறலாம். ஆயினும் ஒவ்வொருவரும் தம் மனவாயிலைக் காவல் புரியுமாறு யாதேனும் ஓர் நல்லெண்ணத்தைக் கொண்டிருக்கவேண்டும். அவ்வாறு மட்டும் செய்யின், தீய எண்ணம் ஏதும் நுழைய இடம்பெறாது.

நம்மைச் சுற்றிலும் உள்ளோர்க்கு நாம் செய்ய வேண்டிய கடமை இன்னின்ன என நன்குணர்வதையும், உண்மையோடும் சிரத்தையோடும் அவற்றைச் செய்வதையும் "பரோபகாரம்" என்பது குறிக்கும். இவ்வுலகத்தில் தான் செல்லுமிடந் தோறும் பிறர்க்குப் பேருதவி புரியும் நற்சமயத்தை நாடுபவனே பரோபகாரி. அவன்

(பசி பிணி முதலியவற்றால் பிறர் வருந்தக் காணினும் கேட்கினும்) தானே வலிய விரைந்து சென்று அவர்கள் துன்பத்தை நீக்கி (மனம், மொழி மெய்களால்) உபகாரம் செய்வான். நாம் நீக்கக் கூடாத குறைகள் பல இருக்கவே இருக்கின்றன. பசிப்பிணியால் வருந்தும் பலர்க்கு நாம் அன்னமிட முடியாதவர்களாக நாம் இருப்பதும் உண்மை. ஏழைகள் பலர்க்கு நாம் உதவி புரியவும் உள்ளபடியே முடியவில்லை. ஆயினும், இயலாதபோது இவற்றை இயற்றாவிடில் தீமையாகமாட்டாது. இயலும்போது இயற்றாமையே தவறாகும்.

"இசையா வொருபொருளை இல்லென்றல் யார்க்கும்
வசையன்று வையத் தியற்கை."

பிரஹ்மக்ஞான சங்கத்தாருள் ஒவ்வொருவரும் பிரதிதினமும் அற்ப சொற்பமேனும் தம்மால் செய்யக்கூடிய நலத்தைச் செய்து வருவாராயின் பிறர் தாங்கும் "கஷ்டம்" என்ற கனகூமை குறைந்து கொண்டே வரும்.

பரோபகார தருமம் தொடங்க வேண்டிய முதல் இடம், நமது இருப்பிடமே யாகும். பிறகு பிறர் பால் அது பரவவேண்டும். நம்மை அடுத்து வந்தவர்க்கு நாம் முதலில் உதவி புரியவேண்டும். பிறகு நம்மைச் சுற்றிலும் கவனித்துப் பார்த்து அயலார்க்கு நாம் செய்து தீரவேண்டிய நன்மைகள் இன்னின்ன என்பதை யோசிக்க வேண்டும். உதாரணமாக:—வாரத்திற்கு, ஓர் மாலைப்பொழுது நம் உதவி பெற்று மகிழக் கூடிய பஞ்சமர் பாடசாலைகள் இருக்கலாம்; அல்லது யாதேனும் "பெண்கள் பாடசாலை" ஒன்றிற்கு, மூலதனம் அவசியமாக இருந்து அதனைச் சேகரிப்பதில் நாம் உதவி செய்யக்கூடியதாக இருக்கலாம்; அல்லது, நல்லவை யென நம்மனத்திற்குப்பட்டனவும் ஊக்கத்துடன் நாம் உழைக்கக் கூடியனவுமான ஜனசார சீர்திருத்தமோ, ராஜாங்க சம்பந்தமான சீர்திருத்தமோ சில இருக்கலாம். இவைகளில், தம்மால் எதன் சம்பந்தமாக உதவி செய்யக் கூடும் என்பதை ஒவ்வொருவரும் தெரிந்துணர வேண்டும். பிரஹ்மக்ஞானசங்கத்தின் உண்மை அங்கத்தினரோ இதனை உணர்வதோடு இல்லாமல் அற்ப சொற்ப மேனும் உதவியும் புரிந்து தீருவர்.

ஏனைய பலவற்றினும், இந்தியாவிற்கு அத்யாவசியமானவை தன்னயங் கருதா உழைப்பும் பொது நலத்திற்கண்ணும்கருத்துமே. சர்க்காரைச் சந்தோஷிப்பிக்கும் பொருட்டும், பட்டம் ஏதேனும் பெறலாகும் என்ற நம்பிக்கையுடனும், சுயலாபம் அல்லது தன்னையும் கருதியும், ஒரே நோக்கத்துடன் எத்துணைபேர்கள் வேலைசெய்கின்றனர்! "பலாபேக்ஷையின்றி பகவத்ஸேவை புரிபவர் இங்கு யாவருளர்?" என ஓர் பரமஞானி கேட்டருளினராம். அதுபோலவே "பலாபேக்ஷயின்றி நம் பாரதமாதாவிற்குத் திருத்தொண்டு புரிய இங்கு யாவருளர்" என்று நாம் இன்றைக்குக் கேட்கிறோம். பிரஹ்மக்ஞான சங்கத்தின் உண்மை அங்கத்தினர் ஒவ்வொருவரும் "யான் உளேன்; யான் உளேன்" என்று உவந்துரைப்பாராக.

அன்னி பெஸண்டு.

நன்மொழி.

இம்மாயாவுலகத்தில் இரண்டு கார்யங்கள் எப்போதும் அஸாத்தியம்:— (1) கர்ம நியதியை மீறி அதிகமான லோகதுக்கங்களை யநுபவிப்பதும், (2) அவரவர் பூலோக வாழ்க்கைக்கு ஏற்பட்ட கால வரையறை முடிவதற்கு முன் இறப்பதும், இரண்டு அஸம்பாவிதமான கார்யங்களாகும்.

ஆராய்ந்தறியும் புத்திக்கூர்மை (Observation) யில்லாத பிரயாணியொருவன் தேசாந்தரங்களுக்குச் சென்றால், சென்ற பிரகாரமே தான் திரும்பி வருவான். அவ்வத்தேசங்களில் உள்ளவர்களின் ஜாதி, தொழில், நாகரிகம், அவர்களின் குணநிசயங்கள், கட்டிட அமைப்புகள் (Architecture) அத்தேசங்களின் பூர்வ சரித்திரங்கள், அங்கங்கு வழங்கி வரும் மதங்கள் இவைகள் ஒன்றையும் கவனியாது, உண்பதையும் உறங்குவதையும் மட்டும் காரியங்களாகக் கொண்டு திரும்பி வந்து சேர்வான். இவனைச் சிறகுகளில்லாப் பக்ஷிகளெனக் கூறலாம்.

சிஷ்யர்களில்லாத பண்டிதனும், பரோபகாரச் செய்கை யற்ற பக்தனும், முறையே பழமில்லாத மரத்திற்கும், கதவில்லாத திறந்த வீட்டிற்கும் ஒப்பாவார்கள்.

14

லோகஸம்ரக்ஷணம்.*

(Helping the World.)

லோகஸம்ரக்ஷணமாகும் பெருங் காரியத்தை நிர்வஹிக்கும் முக்தி மார்க்கத்தில் ஸஞ்சரிப்பதற்கு ஸாதநங்களில் முதன்மையானது ஏகாக்ர சித்தமாம். மநஸ் ஒருமைப்படுமாயின் அதனால் லௌகிக முயற்சியுள்ளவர்களுங்கூட விசேஷ பலனை யடைகிறார்கள். அவ்விதமாய் மநதைத் தன் வசப்படுத்திக் கார்யங்களைச் செய்யும் லௌகிகர்களைப் பார்த்தவுடன் இம்மநோ ஸங்கிரஹம் முமுக்ஷுக்களுக்கு எவ்வளவு பலனைத் தருமென்பதை நாம் அறிந்து கொள்ளலாம். உலகத்தவர் கோரும் பலன் எளிதாயிருப்பது போல் முமுக்ஷுக்களுடைய கோரிக்கை இலகுவன்றாதலின், மோக்ஷத்தை நோக்கி மநதைபடக்கி ஒரு வழிப்படுத்தல் மிகவும் கடினமாகின்றது. ஆயினும் இப்புண்ணிய பூமியாகிய இந்தியாவில் மேற்றிசையின் நாடுகளைக் காட்டிலும் பரலோகங்கள் உண்டென்னும் நம்பிக்கை மிகவும் இலகுவாய் அடையப்படுகிறதன்றோ?

இனி மநத்தின்கண் எழும் இந்நம்பிக்கை வேரூன்றி நிலைபெறும் வழிகளிற் சிலவற்றைக் கூறுவாம். முக்தி மார்க்கத்தில் பிரவேசித்து அதன் உண்மைகளைப் பிரதி நிமிஷமும் பிரத்தியக்ஷமாய் அநுபவிப்பவர்களும் நம்பிலும் விசேஷ அபிவிருத்தி உடையவர்களுமான ஸாதுக்களின் ஸங்கத்தை நாம் தேடி அடைதல் வேண்டும். முக்தியாகும் நமது பெரும் விஷயத்தைப்பற்றி அடிக்கடி படித்தலும் கேட்டலும் சிந்தித்தலும் அவசியம். முக்தி ஸ்வரூபமாகிய உயர் ஞானத்தை நமக்குக் கொடுக்கக்கூடிய லக்ஷணங்களாகிய நற்குண நற்சீலங்களை அசையா மநத்துடன் இடைவிடாது அப்பியஸித்தலும் மிக அவசியமே.

அவஸரமும் தடபடலும் மிகுந்ததே இக்காலம். ஜநங்களுடைய ஸ்வபாவம் அநேக கார்யங்களை ஆரம்பித்து அவற்றுள் ஒவ்வொன்றிலும் கொஞ்சங் கொஞ்சமாய் நிறைவேற்றுவதாயிருக்கின்றதே தவிர ஒன்றையாவது ஆரம்பித்து அதைப் பூரணமாய் முடித்துக் கொள்வதென்பது கிடையாது புஷ்பங்கள் தோறும் உட்கார்ந்து ஓடிக்கொண்டிருக்கும் (Butterfly) பூச்சியானது எவ்விதம் பூர்ணமா

---

* Translated from "Inner Life" by C. W. L.

யித் தங்குகிறதில்லையோ அவ்விதமே விளங்குகின்றது. இந்தியாவில் பூர்வகாலங்களிலும் ஐரோப்பாக்கண்டத்தில் சென்ற மத்ய காலங்களிலும், ஏதேனும் ஒரு பெரிய காரியத்தை (கிரந்தம், சில்பம் அல்லது சித்திரம் இவை முதலியவற்றுள்) அவலம்பித்து, அதை ஸாதிப்பதில் தன் பூர்ண காலத்தையும் அர்ப்பணம் செய்வது போல் இக்காலத்தில் எவரும் செய்வாரில்லை.

ஞான மார்க்கத்தின் அப்பாஸத்தால் ஒருவனது வாழ்க்கையில் ஏற்படும் அநேக மாறுதல்களுள் மனத்தை யடக்கி ஒரு முகப்படுத்தல் என்னும் இதுவே முக்கியமானது. இதனால் ஒருவன் இவ்வப்பியாஸ முறைகளில் புகுங்கால் அதன் முன்னர் தான் செய்து வந்த கடமைகளெல்லாவற்றையும் விட்டு விட வேண்டுமென்று நான் சொல்ல வந்தேனல்லன். பின்னை எவ்விதமான கடமையாயினும் அவற்றை ஒவ்வொன்றையும் இடை விடாத கவனம், கருத்துடன் நிறைவேற்றுதலே யோகியினது முதற்படியாகும். ஆயினும் தன் மநத்துள் எப்பொழுதும் குடி கொண்டிருக்கும்படியானதும், ஒரு கணப்பொழுதாவது தான் மறக்க முடியாததுமான ஓர் கருத்தைத் தனதாக்கிக் கொள்வான். அஃதாவது பிறர் யாவருக்கும் உபகாரமாக இருந்தலே. ஏன் இக்கருத்தை அவன்கொள்ளவேண்டுமெனின், உலகத்தையாளும் கடவுளுடைய ஸங்கல்பம் யாது என்பதை யறிந்து கொண்டு அச்சங்கற்பத்தோடு இசைந்து நடப்பானன்றோ! இவ்விதம் உலகத்திற்கு க்ஷேமம் புரிவதற்கு அநேக வழிகள் உண்டு. பிரயோஜனப்படும்படி லோகோபகாரம் செய்வதென்றால் அதற்குத் தக்க சக்தியை ஒருவன் ஸம்பாதித்துக் கொள்ள வேண்டும். அதற்காகத் தன்னையே திருத்திக் கொள்ளவேண்டும். தன்னிடமிருக்கும் துர்க்குணங்கள் யாவையும் நீக்கிக் கொண்டு நற்குணங்களைத் தன்னிடம் அமைத்துக் கொள்ளல் வேண்டும். தவிரவும் பிறருக்கு உபகாரம் பண்ணுவதற்கு ஏற்படும் சமயங்களை யெல்லாம் இடைவிடாத கவனத்துடன், விட்டு விடாது, உபயோகப்படுத்தல் வேண்டும். உலகத்திற்கு உபகாரம் பண்ணுவதற்கு ஒரு பெரிய வழியானது நமது பிரஹ்மஞான ஸமாஜத்தின் மெம்பர்களுள் யாவருக்கும் ஸுலபமா யேற்பட்டிருக்கிறது. அதாவது பிரஹ்மஞானத்தின் உண்மைகள் யாவற்றையும் ஜனங்களுள் பரவச் செய்வதே.

எவரிடத்திலும் நமது கருத்துக்களையும் கொள்கைகளையும் அங்கீகரிக்கும்படி நாம் கட்டாயப்படுத்த வேண்டியது அவசியமல்ல. அப்படிச் செய்வது நமது தொழிலுமல்ல. அப்படிச் செய்வதில் சந்தோஷமுமில்லை. ஆனல் உலகம், நமது வாழ்க்கை இவற்றின் பாரமார்த்திக விவரங்கள் யாவையும் விவரித்துக் கூறும் நமது பிரஹ்மக்ஞானத்தின் ஸம்பிரதாயங்களை உலகத்தார் அறிந்து கொள்ளுமாறு வெளிப்படுத்தல் நமது கடமையும் பாக்கியமுமாகுமன்றோ? ஞானரூபமாகிய இவ்வமிருதத்தை நாம் வழங்கும்பொழுது அதைப் பிறர் ஏற்று உண்ணுமலிருப்பார்களானல் அது அவர்களது இஷ்டம், அவர்களது இலாப அலாபமாகும். ஆனலும் இவ்வித பரம அமிருதம் இருப்பதையே யறியாமல் தமது அக்ஞானத்தால் உலகினர் அழியும்படி விடுதல் நியாயமன்று.

ஆகலின், இவ்விதம் இவ்வுயர் தத்துவங்களை உலகில் பரவச் செய்வது நமது கடமையேயாகும். அதை எவ்விதத்தாலும் நிறுத்துதல் கூடாது. ஸமாஜமாகப் பொதுவாக நாம் செய்ய வேண்டிய பெருங்கடமை இதுவே. இது நாம் ஒவ்வொருவரும் செய்யவேண்டிய கடமையுமாகும். ஆதலால் நம் மனத்துள் அவற்றை நிரப்பி எப்பொழுதும் அதை எவ்விதம் செய்யலாம் எம்மாதிரி பிறர்க்குத் தெரியப்படுத்தலாம் என நாம் ஆலோசனை செய்துகொண்டு அதற்குப்பலவித வழிகளையும் கண்டுபிடித்துக் கொண்டே இருக்க வேண்டும். அதற்கு எப்போது அவகாசம் நேருமோ அவற்றை யெல்லாம் உபயோகிக்க வேண்டும். வேறொருவர் அவ்வித உபதேசங்களைச் செய்து வருகிறதில்லை என்னும் சாக்குகளையும் கூறி நாம் அவ்விதம் செய்யாதிருத்தல் கூடாது. பிறர் அவ்விதம் செய்யாமலிருந்தால் அஃது அவரது பொறுப்பாகும். நமக்கும் அதற்கும் ஸம்பந்தம் யாதுளது? நம்மாலே செய்யக் கூடியவற்றை முழுமையையும் நாம் சரியாய்ச் செய்யாதொழிவோமாயின் நமது கடமையினின்றும் நாம் தவறுகிறோம். நாம் மட்டும் மேற்செல்ல நமது மார்க்கத்தைப் பிரகாசிப்பதற்காக மட்டும் பிரஹ்மக்ஞானமாகும் இம்மஹாதீபம் இக்காலத்தில் உலகத்தில் ஏற்படவில்லை. பின்னை நாம் அஃதை யறிந்த பின் முறையே நாமும் நல்வழிகளைத் தெரியாமல் தவிக்கும் ஸஹோதரர்களாகிய உலகத்தவர்க்கு உபகாரமாக வழிகாட்டுவோர்களாகலாம், ஆகக்கூடும் என்பதற்கல்லவா இக்காலத்தில் பெரியோர்களால் இந்த ஞானதீபமானது அளிக்கப்பெற்றது.!

ஆர். சுந்தரராஜ ஐயர்.

வெண்தாமரை நாள்.

வெண்தாமரையை அடையாளமாக வுடையதும் பிரஹ்ம ஞான சபையின் காலஞ்சென்ற அங்கத்தினர்களின் ஞாபகார்த்தமாக ஏற்பட்டதுமான நாளிது மேமீ 8உ புள்ள தினம் மதுரை பிரஹ்மஞான மந்திரத்தில் கொண்டாடப்பட்டது. அன்றைய தினத்தில் சுமார் 300 எளிய ஜனங்களுக்கு அன்னம் அளிக்கப்பட்டது. அன்று சாயங்காலம் தைத்திரீய உபநிஷத்தும் தக்ஷிணாமூர்த்தி ஸ்தோத்திரமும் ஸந்தையாகச் சொன்ன பிற்பாடு, பகவத்கீதையில் 10-வது அத்தியாயம் ஸம்ஸ்கிருதத்திலும் இங்கிலீஷிலும் வாசிக்கப்பட்டது. புத்தருடைய சரித்திரமாகிய Light of Asia என்னும் ஆங்கில கிரந்தத்திலிருந்து, பௌத்தர் அவருடைய மனைவி குழந்தைகள் சுற்றத்தார் ராஜ்ஜியம் இவைகளைத் துறந்து வெளியேறிச் செல்லும் பாகம் வாசிக்கப்பட்டது. தர்மபாதம், கிருஸ்துவவேதம், ஜைனசூத்ரம் இந்த இதரமதகிரந்தங்களிலிருந்தும் முறையே அரிய பாகங்கள் வாசிக்கப்பட்டன.

கடைசியாக மதுரை பிரஹ்மஞான சபையின் அக்கிராசனாதிபதியானவர் ஒருசிறு உபந்நியாஸம் செய்தனர். மகரிஷிகளின் ஆக்ஞையைச் சிரமேற்கொண்டு இந்த ஸபையை ஸ்தாபித்த பிளவட்ஸ்கி அம்மையாருடையவும் கர்னெல் ஆல்காட்டு என்பவருடையவும் ஞாபகார்த்தமாயும் மற்றும் அவரவர்கள் சக்திக்குத் தக்கவாறு உலகத்தின் ஆளுகையை வகித்திருக்கிற மகரிஷிகளின் கருத்திற்கிணங்க இச்சபையில் கைங்கரியம் புரிந்து காலஞ்சென்ற மற்ற மெம்பர்களின் ஞாபகார்த்தமாகவும் இத்தினம் ஏற்பட்டுள்ளது.

இச்சபையின் முயற்சிபோன்ற முயற்சிகள் இந்த உலகத்தின் பலகாலங்களில் அந்தந்த காலத்திற்கு தகுந்தவாறு ஏற்பட்டிருக்கின்றன. அவ்விதமே தற்காலத்திலும் ஏற்பட்டுள்ளது. இச்சபையின் முயற்சியால் மானிட சமூகமானது ஒரு உயர்ந்த பதவியை அடையத்தக்கது. அக்காலத்தை சீக்கிரம் வருவிக்க உலகத்தை அதற்குத் தக்கவாறு அமைக்க இச்சபையோர் பிரயத்தனம் செய்யவேண்டியவர்

அப்படிச்செய்தால்தான் இந்துக்கள் வியாசர் அல்லது ஜகத்குருவென்றும், பௌத்தர்கள் மைத்திரேயரென்றும், கிருஸ்துவர்கள் கிருஸ்துவென்றும், மகமதியர்கள் மாடி என்றும் இவ்வாறு பலவாறாகக் கொண்டாடுகிற மகரிஷியானவர் அவதரித்தல் சமீபமாகும். இவ்வுலகத்திலுள்ள தற்கால சின்னங்கள் எல்லாம் அவர் வரவைக் காட்டுகின்றன என்பதில் ஐயமில்லை. ஆகையால் பிரஹ்மக்ஞான சபை மெம்பர்களில் காலஞ்சென்றவர்களில் சிலர் மறுபடியும் அவர்கள் இப்புவியில் துவக்கிவிட்டுப்போன வேலைகளை மறுபடியும் கைக்கொள்ளுமாறு ஜன்மம் எடுத்தும், சிலர்கள் எடுக்கத்தயாராகவும் இருக்கின்றனர். மூன்று மார்க்கங்களாகிய ஞானம், பக்தி, கர்மம் இவைகளில் தற்காலத்தில் கர்மமார்க்கத்திற்குப் பிராதான்யம் ஏற்பட்டிருக்கிறது. இவ்விந்தியா தேசத்தை உத்தாரணம் செய்யவும் உலகம் உயர்வு அடையவும் மகரிஷிகள் கர்மமார்க்கத்தைக் கைக்கொண்டு எவ்வாறு அஹோராத்திரமாய்ப் பூர்ண ஊக்கத்துடன் வேலைசெய்கிறார்களோ, எவ்வாறு பிரஹ்மக்ஞான சபை அக்கிராஸனாதிபதியாகிற அன்னிபெஸண்டு அம்மையார் பலஹித முயற்சிகளில் பிரவேசித்து உழைக்கிறார்களோ, எவ்வாறு மற்ற தலைவர்கள் உற்சாகத்துடன் பிரவிர்த்தித்துக்கொண்டிருக்கிறார்களோ அவ்வாறு நாமும் கர்ம யோகத்தை இச்சபையின் காரியங்களை நிறைவேற்றுவதில் அனுஸரித்தல் வேண்டுமென்று சொன்னார்.

அ· ரங்கஸ்வாமி ஐயர்.

நன்மொழி.

வயிறு சிறுத்திருந்தால் அற்ப ஆஹாரம் கொடுத்தமாத்திரத்தில் நிறைந்துவிடும். மநம் சிறுத்திருந்தால், அதாவது ஆசை குடிகொண்ட அற்ப மநத்தினனாயிருந்தால் அவனுக்கு இவ்வுலக முழுமையிலுமுள்ள ஐசுவரியத்தையளித்தபோதிலும், அவனைத் திருப்தி செய்ய முடியாது.

தன் மநதறிந்து தன் கடமையை அலக்ஷியம் செய்கிறவன், தன் அயலானுக்குக் கொடுத்துத் தீர்க்கவேண்டிய கடனையுங்கூட மறப்பான்.

அவதாரங்கள்.

(4-ம் தொகுதி 408-ம் பக்கத் தொடர்ச்சி.)

இனிமேல் அவதாரம் என்றால் என்ன என்பதைப்பற்றி உட்புகுந்து பார்ப்போம். அவதாரம் பண்ணுகின்ற மஹாபுருஷன் அநேக கல்பங்களில் அநேகாயிரம் ஜன்மங்களாய் மேன்மேலும் பரிபக்குவதசையை யடைந்து, கடைசியில் ஈசுவரத் தன்மையையும் பகவானுடைய பூர்ணசக்தியையும் அடைந்தவரே. நம்மைப்போலவே, நமக்கும் கீழ்ப்பட்ட வர்க்கங்கள் முதற்கொண்டு ஒவ்வொன்றிலும் விகாஸமுறையை யநுஸரித்து, பாஷாண வர்க்கத்திலிருந்து (Mineral kingdom) ஓஷதி வர்க்கத்திற்கு வந்து (Vegetable kingdom) அந்த ஓஷதி வர்க்கத்திலிருந்து பிராணிவர்க்கத்திற்கு வந்து (Animal kingdom) பிராணிவர்க்கத்திலிருந்து மனிதவர்க்கத்துக்கு வந்து, மனிதவர்க்கத்திலிருந்து ஜீவன் முக்தனாகி, ஜீவன் முக்தஸ்தானத்திலிருந்து மேலே அநேக படிகள் தாண்டி, கடைசியில் ஈசுவரனுடன் ஐக்கியமாய் அவருடைய பரிபூரணத்தை (Divine Perfection) பூர்வ கல்பங்களில் இதரப் பிரஹ்மாண்டங்களில் அவர் அடைந்திருக்கவேண்டும். பகவானுடைய பிரக்ஞை மாதிரி இவருடைய ப்ரக்ஞையும் அகண்டமாக ஆயிருக்கவேண்டும். பகவானுடைய ஸர்வக்ஞத்துவம் இவருக்கும் வந்திருக்கவேண்டும். ஸத்சித் ஆநந்தாதி குணங்களில் பகவானுடன் ஒன்றாயிருக்கவேண்டும். சென்ற கல்பங்களிலேயே இப்படிப்பட்ட பதவியை யடைந்தவர்கள்தான் இந்த கல்பத்தில் இந்த ப்ரஹ்மாண்டத்தில் அவதார புருஷர்களாக வரமுடியும். அப்படிப் பட்டவர்களுக்குத்தான் நித்தியமுக்தர்கள் என்றும் நித்திய ஸூரிகள் என்றும் விஷ்ணு பாரிஷதாள் என்றும் பெயர். இவர்களில் ஒருவர்தான் அவதாரபுருஷராக அவதரிக்கிறார். இவர்களைவிட்டுவிட்டு பகவானே வருகிறார் என்று சொல்வது புத்திக்கு நியாயமாகப் புலப்படவில்லை. ஸாதாரண ஜீவன்கள் மாதிரி ஏதோ ஒரு காலத்தில் இருந்து அநேக ஜன்மங்கள் எடுத்து மேன்மேலும் பரிபக்குவதசையையடைந்து கடைசியில் பகவானுடைய பூர்ணமானஸ்திதியைத்தான் அடைந்திருக்கும் தத்

தத்தை சில வார்த்தைகளால் கிருஷ்ணபகவான் பகவத்கீதையில் காட்டியிருக்கின்றார்:—"ஹே அர்ச்சுன! நீயும் நானும் அநேக ஜன்மங்கள் கடந்திருக்கின்றோம். நான் அவைகள் எல்லாவற்றையும் அறிவேன். ஆனல் நீ அறியமாட்டாய்" [பகவத்கீதை 4-வது அத்.—5வ-து சுலோகம்] இவைகளால் கிருஷ்ணபகவானுக்கு முன்ஜன்மங்கள் உண்டு என்பதை அவர் வாயைக்கொண்டே கேட்டுவிட்டோம். அந்த வார்த்தைகளால், தான் ஈசுவரத் தன்மையை அடைவதற்கு முன் தனக்கு நேர்ந்த ஜன்மங்களும், தான் ஈசுவரத்தன்மையடைந்தபிறகு, ஜீவகோடிகளின் நன்மைக்காக அவர் எடுத்தஜன்மங்களும்—இரண்டுவிதமான ஜன்மங்களும் குறிப்பிடப்படுகின்றன.

ஸகல ஜீவகோடிகளுடைய நன்மை தன்னுடைய பொறுப்பென்றும், தர்மத்திற்குக் குறைவுவந்து, அதர்மத்திற்கு உயர்வு நேருங்காலங்களில், தர்மத்தை நிலைநிறுத்துவதற்காக, அநேக வெவ்வேறு தேகங்களை யெடுத்துக்கொள்வதாகவும் சொல்லுகின்றார். அவர் உபயோகப்படுத்துகிற வார்த்தைகளிலிருந்து, நம்முடைய புஸ்தகங்களில் வெளிபிடப்பட்டிருக்கிறவைகளைக் காட்டிலும் அதிகமான ஜன்மங்கள் இருந்திருப்பனவாகத் தெரிகிறது. தன் மனுஷ்ய ஜன்மங்களைத்தான் அவர் குறிப்பிடுகிறதாகத் தெரிகிறது. அந்த ஜன்மங்களை ஸாதாரணமாய் ஒப்புக்கொள்ளப்பட்ட விஷ்ணுவின் மனுஷ்யாவதாரங்கள் என்று எண்ணும் பக்ஷத்தில், கிருஷ்ணாவதாரத்திற்கு முன் இரண்டு அவதாரங்கள்தான் மனுஷ்யாவதாரங்கள் என்று தெரிகிறது. ஏனென்றால், மத்ஸ்யம், கூர்மம், வராஹம், நரஸிம்ஹம் முதலிய அவதாரங்கள் மனுஷ்ய தேகங்களில் எடுக்கப்பட்ட அவதாரங்களல்ல. வாமனர்கூட மனுஷ்யதேகங்கள் கொண்ட பெற்றோர்களுக்குப் பிறக்கவில்லை. மனுஷ்யகோடிகளின் நன்மையைக் கைக்கொண்ட அவர், ராமகிருஷ்ணாதி அவதாரங்களை யெடுத்து மனுஷ்யகோடிகளுக்கு நன்மையைச் செய்ததோடுகூட, இன்னும் அநேக வெவ்வேறு காலங்களில் லோகத்தின் வெவ்வேறு இடங்களில் மனுஷ்யகோடிகளை உத்தாரணம் பண்ணுவதற்கும் சீர்குலைந்த விஷயங்களைச் சீர்திருத்துவதற்கும் அப்போதைக்கப்போது மஹா புருஷர்கள் ரூபமாய் அவதரித்திருக்கலாம்.

மேலும், அவர் பகவானுடைய அகண்டமான ப்ரக்ஞையையும் ஸர்வக்ஞத்துவத்தையும் பூர்ணமான ஸ்திதியையும் அடைவதற்கு முன் தனக்கு நேர்ந்த ஜன்மங்களும் அந்த ஜன்மங்களில் அடங்கியிருக்கலாம்.

இந்த விஷயத்தை ருசுப்படுத்துவதற்கு யோகவாஸிஷ்டத்தில் ஓர் ஆதாரமிருக்கின்றது. மஹாதேவர், விஷ்ணு, ப்ரஹ்மா, இவர்கள் எல்லோரும் கீழேயிருந்து ஒவ்வொரு படியாகத்தான் மேலே போய், கடைசியில் அப்படிப்பட்ட உன்னதமான ஸ்திதியையடைந்திருக்கிறார்கள் என்று யோகவாஸிஷ்டத்தில் தெளிவாய்ச் சொல்லப்பட்டிருக்கின்றது. ஆகையினால் எப்படிப்பட்ட உன்னதமான ஸ்திதியிலிருக்கிறவர்களும், நம்மால் கணக்கிட முடியாத ஏதோ ஒரு காலத்தில் நம்முடைய ஸாமான்யஸ்திதியிலிருந்துதான் மேலே போயிருக்கிறார்கள் என்று எண்ணுவது பிசகல்ல. அப்படியெண்ணுவதினால் அவர்களுடைய மஹிமைக்கு யாதொரு குறைவுமில்லை. முன் கல்பங்களில் அப்படிப்பட்ட உன்னதமான ஸ்திதியை யடைந்தவர்கள்தான் இந்த கல்பத்தில் அவதார புருஷர்களாக லோகத்தையும் லோகத்திலுள்ள ஜனங்களையும் உத்தாரணம் பண்ணும்பொருட்டு அவதரிக்கிறார்கள் என்று எண்ணுவதில் பிசகு ஒன்றுமில்லை.

ஆவேசம் என்ற விஷயத்தில், இதர ப்ரஹ்மாண்டங்களில் இதர கல்பங்களில் மேன்மேலும் பரிபக்குவதசையையடைந்து அநேக ஜன்மங்களின் முடிவில் ஈசுவரனுடன் ஐக்கிய யாவத்தையும் ஈசுவரன் போன்ற பூர்ணத்துவத்தையுமடைந்தவர் என்று சொல்லமுடியாது. ஒரு மனிதனானவன் ஞானத்திலும் குணத்திலும் பக்தியிலும் கருணையிலும் அன்பிலும் எல்லா ஜனங்களைக்காட்டிலும் மேலானவனாயிருக்கும்பக்ஷத்தில், பகவானுடைய சக்தியின் ஓர் அம்சம் அவனிடத்தில் தோன்றுகிறது. பகவத்சக்தி அவனிடத்தில் விளங்கும்வரையில், அபாரமான சக்தியுடையவனாயும் அபாரமான ஞானமுடையவனாயும் ஜனங்களுக்குத் தோற்றுவான். அப்பொழுது தன்னால் ஸாதாரண நிலைமையில் செய்யமுடியாத அபூர்வக்ருத்தியங்களை எல்லாம் அவன் செய்வான். அக்காலத்தில் அவனிடத்தில் வ்யவஹரிக்

கின்ற சக்தியானது பகவத் சக்தியே. ஆவேசமானது ஒரு மனிதனுடைய வாழ்க்கையின் பின்பாகத்தில் தான் பொதுவாய் வெளிப்படும். அவ்வாழ்க்கையில் பெரும்பாகம் வரை அது நீடித்திருக்கும். பரசுராமருடைய அவதாரம் அவதாரமன்று. ஆவேசமென்றே சொல்லலாம். ஏனென்றால், அவருடைய வாழ்க்கையின் முன்பாகத்தில் அவர் ஸாதாரணமான மனிதராகத்தானிருந்தார். பின்னால்தான், பகவானுக்கு சில காரியங்கள் ஆகவேண்டியிருந்தபடியால், அந்தக்காரியங்களைச் செய்துமுடிப்பதற்கு அந்தக்காலத்து ஜனங்களுக்குள் பரசுராமர் ஸத்பாத்ரமாக இருந்தார். ஆகையினால் அவரிடத்தில் பகவான் சிலகாலம் வரையில் தன் சக்தியை வெளிப்படுத்தினார். அதனால் ஏற்படவேண்டிய காரியம் முடிந்ததும், பகவானவர் ராமரூபியாய், தான் கொடுத்திருந்த சக்தியை தன்னிடத்திலேயே ஆகர்ஷித்துக்கொண்டார்.

பரசுராமர், ராமகிருஷ்ணாதி அவதாரங்கள் இவைகளைக்குறித்து இரண்டுவிதமான கொள்கைகளை நாம் எடுத்துப் பேசக்கூடும். தசாவதாரங்களுக்குள் பரசுராமர், ராமர், கிருஷ்ணர், புத்தர் இந்த அவதாரங்களில் தான் பகவான் மனுஷ்யதேகத்தைத் தரித்தது, புத்தாவதாரத்தைக் குறித்து பின்னிட்டு விஸ்தாரமாய்ப் பேசுவோம். பரசுராமருடைய அவதாரத்தை ஆவேசம் என்றே கொள்ளல்வேண்டும். ஆகையினால் மிகுதியிருக்கிறவைகள் ராம கிருஷ்ணாதி அவதாரங்கள். கிருஷ்ணனுடைய அவதாரத்தைப்பற்றி முதலில் பேசுவோம். இந்த விஷயத்தில் இரண்டுவிதமான அபிப்பிராயங்கள் சம்பாவிதமாயிருக்கின்றன. கிருஷ்ணன் என்ற மஹான் அந்தக் காலத்திலுள்ள ஜனங்களைக் காட்டிலும் (Disciple Krishna) ஞானத்திலும் குணத்திலும் சக்தியிலும் மேலானவராக இருந்திருப்பதாக எண்ணலாம். அநேக ஜன்மங்களாய் ஞானமார்க்கத்தில் முயற்சித்து அபாரமான ஞானத்தைப் பெற்றிருக்கலாம். அப்படிப்பட்ட தசையில், பகவான் லோகத்தில் தன்னுடைய காரியம் நிறைவேறுவதற்காக தானே அவதரித்து அவருடைய ஆத்மாவோடு (Krishna's Atma) தன்னுடைய ஆத்மஸ்வரூபத்தைக் கலந்துகொண்டிருக்கலாம். அதாவது கிருஷ்ணன் என்ற ஜீவனானவர் பகவானுடைய ஸ்தானத்திற்கு மேற் சென்றிருக்கலாம். இது ஒரு சார்பு. மற்றொரு சார்பு என்ன

வென்றால், ஒரு மஹாத்மாவானவர் அநேக ஜன்மங்களாய்ப் பரிபக்குவ தசையையடைந்து அதற்குப் பிறகு ஜீவன் முக்த தசையை யடைந்திருக்கலாம். அதன்பின்னர் மேன்மேலும் சென்று, அவருடைய பிரக்ஞையானது கண்டமான ப்ரக்ஞையிலிருந்து அகண்டமான ப்ரஞைக்கு மாறியிருக்கலாம். அப்பொழுது பகவானுடைய ஸர்வக்ஞத்துவத்தையும் பூர்ணமான ஸ்திதியையும் அவர் அடைந்திருப்பார். இரண்டு கொள்கைகளையும் நாம் எடுத்துக் கொள்ளலாம். ஆனால் ஒரு அஸம்பாவிதம் மட்டும் ஏற்படுகின்றது. ஜீவன் முக்த தசையை அடைந்த பின்னர் ஓர் புருஷனை அவதாரம் என்று நாம் கூப்பிடும் பக்ஷத்தில், சுகர், வஸிஷ்டர், துர்வாஸர், ஜீவன் முக்த தசையை யடைந்த இன்னும் அநேக மஹரிஷிகள் இவர்கள் எல்லாரையும் குறித்து அவதாரம் என்று சொல்ல வேண்டிவரும். ஆனால் அவர்களெல்லோரையும் குறித்து அவதாரம் என்று ஸாதாரணமாய்ச் சொல்லப்படுவதில்லை. அவர்களெல்லாரும் அவதாரங்களல்ல வென்று சொல்லிவிடும் பக்ஷத்தில் ராம கிருஷ்ணர்கள் ஜீவன் முக்தர்கள் அல்ல வென்று சொல்லாமலே ஏற்பட்டு விடும். ஜீவன் முக்தர்களா யிருப்பதனால் அவர்களுக்கு அவதாரங்கள் என்று பெயர் வரவில்லை. ஆனால் மற்றொரு அபிப்பிராயப்படி ராம கிருஷ்ணர் என்ற மனிதர்களுடைய ஆத்மாவோடு, லோகத்தில் தன்னுடைய காரியம் நிறைவேறுவதற்காக பகவான் தன்னுடைய ஆத்மாவைக் கலந்து கொண்டார். பகவானனவர், ராம கிருஷ்ணர்களுடைய ஆத்மா இருக்கிற ஸ்தானமட்டத்திற்கு இறங்கி அவர்களுடைய ஆத்மாவோடு கலந்துகொண்டு, அதன் வழியாக லோக ஜனங்களுக்கு தன்னால் செய்யப்படவேண்டிய காரியத்தைச் செய்து முடித்தார். இதனால் தான் ராமர், கிருஷ்ணர்—இரண்டு பேர்களும் அவதாரங்கள் என்று சொல்லப்படுகிறார்கள். இதனால் ராம கிருஷ்ணவதாரங்களுக்கு மஹிமைக் குறைவு ஏற்படுகிறது என்று சொல்வது புத்தியீனம். ராமர், கிருஷ்ணர் என்றவர்கள் ஜீவன்கள் என்றும் பகவான் தன்னுடைய காரியத்தைச் சாதித்துக் கொள்வதற்காக அவர்களுடைய தேகங்களை உபயோகப்படுத்திக் கொண்டார் என்றும் நாம் எடுத்துக்கொள்ளாத பக்ஷத்தில், சிலசில அஸம்பாவிதமான தடைகளும் ஆக்ஷேபங்களும் ஏற்படுகின்றன. ஸாதாரண ஜனங்கள் எண்

னுவது மாதிரி, ராமரும் கிருஷ்ணரும் மனுஷ்ய தேகங்கொண்ட பகவானே என்று நாம் எடுத்துக் கொள்ளுவோம். அவருடைய ஸ்தூல தேகம் போனவுடன், பகவானைத் தவிர பாக்கியாதொன்றும் இருக்கக் கூடாது. வேறு ப்ரத்யேகமான ஆத்மாவாவது ஜீவனாவது இருக்கக் கூடாது. மஹா பாரதத்தில் லோகபாலஸபாவர்ணனையில் நாரதரானவர், யமனுடைய ஸபா மண்டபத்தைப் பற்றிப் பேசும் பொழுது, அவ்விடத்திலிருந்தவர்களுக்குள் தசரத ராமர் என்று ஒருவர் இருந்தார் என்று சொல்லியிருக்கிறார். ராமருடைய தேகம் கேவலம் மாயையாயிருந்திருக்கும் பக்ஷத்தில், பகவான் அதை விட்டுப் போனபிறகு, ராமன் என்று ப்ரத்யேகமான ஜீவன் ஒருவன் இருக்க நியாயமில்லை. ராமர் இறந்து போனதும், பகவான் வைகுண்டத்துக்கு எழுந்தருளி விட்டார் என்று ராமாயணத்தில் சொல்லப்பட்டிருக்கின்றது. ஆனால் மஹாபாரதத்தில், யமலோகத்திலிருந்தவர்களுக்குள் தசரத ராமர் என்று ஒருவர் இருந்ததாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

ஆகையினால் ராமர், கிருஷ்ணர்—இவர்கள் ஜீவர்கள் என்றும், பகவான் தன் காரியம் நிறைவேறுவதற்காக, அவர்களைக் கருவிகளாக (Instruments) உபயோகப்படுத்திக் கொண்டார் என்றும் நாம் கொள்ளும் பக்ஷத்தில் மேலே சொல்லப்பட்ட விஷயத்திற்கு ஒத்துவரும். ராமர் என்றவர் எல்லாரையும் போல் ஓர் ஜீவன், அதற்குமுன் அவருக்கு அநேக ஜன்மங்கள் இருந்திருக்கலாம். இந்த ஜன்மத்திற்குப் பிறகும் அவருக்கு அநேக ஜன்மங்கள் இருந்திருக்கக்கூடும். அவர் ராம அவதாரமாகக் காணப்பட்ட பொழுது அவருடைய ஆத்மா பகவானாக மாறிவிடவுமில்லை. அல்லது அவரே ஜீவன் முக்தராக ஆகிவிடவும் இல்லை. ஆனால் பகவான்தான் அந்த ராமர் என்றவரின் ஆத்மாவின் ஸ்தானத்திற்கு இறங்கி சில காரியங்கள் அதனால் நிறைவேறுகிற வரைக்கும், அதோடு கலந்து கொண்டார்.

(இன்னும் வரும்)

கே. கோடீசுவர ஐயர்.

நுண்ணிய சிற்றுயிர்கள்.

நாம் சுவாஸிக்கும் காற்றும், குடிக்கும் நீரும், மிதிக்கும் மண்ணும், நுண்ணிய அணுப்போல உருவம்கொண்ட ஜீவகோடிகள்பல நிரம்பியன. மனிதவர்க்கத்தின் விருத்திக்கும் க்ஷயத்திற்கும் இவைகளே பெரும்பாலும் காரண பூதமாக இருந்து வருகின்றன. எங்ஙனமெனில், இச்சிற்றுயிரணுக்களிற் சில நம் சுகாநுடலத்திற்காவன் புரிவதோடு நாம் உயிர்வாழ்வதற்கே முக்கியகாரணாதாரங்களாக அமைந்துள்ளன. வேறு சில இனத்தவைகளோ, நமக்குப் பெருந் துன்பம்விளைக்கக் கூடிய பிரமாத தொத்து வியாதிகளுக்குக் காரணமாக இருக்கின்றன.

இவ்வாறு, பெருத்த நன்மை தீமைகளைச் செய்யக்கூடிய அபாரசக்தி படைத்த இவை நுண்ணிய உயிரணுக்களேயாம். இவை ஒவ்வொன்றுக்கும் ஓர் நுண்ணிய அறைபோன்ற (cell) உபாதி உண்டு. இவை பருமனில் பரஸ்பரம் வித்யாஸப்படும். ஆயினும் அவற்றில் அதிபெரிதானவைகளைக்கூட வெறுங்கண்ணாற் காண முடியாது. அதிசிறிதானவற்றைக் காணவேண்டின், அவற்றின் அகலம் நீளம், பருமன் முதலியவற்றை ஆயிரம்மடங்கு அதிகமாக விஸ்தரித்து விரித்துக்காட்டும் "அணுதரிசனி" என்ற பூதக்கண்ணாடியாலன்றி முடியாது. இச்சிறு ஜீவனே "பாக்டீரியா" அல்லது "சிற்றுயிர் அணு" என்று சொல்லப்படும்.

இவ் 'வுயிர் அணு' பூரணவிருத்தி யடைந்தவுடன் இரண்டு அல்லது அதிகமான பகுதிகளாகப் பிரிந் துடைந்து கொள்ளுகிறது. இவ்வாறு உடைந்த ஒவ்வொரு பகுதியும், தான் பரிபக்குவமானவுடன் முற்கூறியவாறே பிரிந்து கொடுக்கும். இவ்வாறு ஒவ்வொன்றும் பிரிந்து உடைந்து கொண்டேபோய்ப் பூரணவிருத்தியடைந்து அதிகரிக்கும். இவற்றுட்சில சுமார் அரைமணிக்குள்ளாகவே, பூரணபக்குவம் அடைவதை என்றேனும் நாம் காண்பமாயின்—விருத்திப்பெருக்குக்கு அநுகூலமான சந்தர்ப்பங்கள் மட்டும் இருப்பின்—அவை அதிவேகத்துடன் பிரிந்து அதிகரிப்பதைக் காணலாகும். உள்ளபடியே ஓர் சிற்றுயிரணு 24 மணி நேரத்தில் 17,000,000 நன்

ணுயிரணுக்களாகப் பெருகும். அவற்றிற்கு ஆகாரம் குறையின் மட்டும் விருத்தியும் குறையக் காண்போம். இவற்றுள் அநேகம் அழித்தொழிக்கவே முடியாத சிற்றுயிர்களாகவும் ஆகின்றன.

உயிரணுக்களில் நல்வினை புரிவனவும் தீவினை புரிவனவும் உண்டு என்றேம். இவற்றுள் நல்வினைபுரிவன, அகாரியமாகத் தம்மிடம் வரும் தீய உயிரணுக்களைத் துரத்தவோ, அல்லது தேடிப்பிடித்துக் கொல்லவோ செய்கின்றன. தீய உயிரணுக்கள் இவ்வாறு அகாரியமாகப் பிரவேசிப்பதால் அவைகளுக்கும் அவற்றைவரவொட்டாமற் றடுப்பவைகளுக்கும் நேரிடும் சண்டையில் தீய அணுக்கள் தோற்றோடிடும். அப்பொழுதுதான் சரீரத்திற்கு ஜ்வரரூபமான அவஸ்தை உண்டாகிறது. தீமை புரியும் உயிரணுக்கள் அசுத்தப் பொருள்களிலும் அழுக்கிலும் இருட்டிலும் அழுகும் பொருள்களிலுமே தோன்றி விருத்தியாகின்றன. இஃதுண்மையாதலின் இயன்றவரை நம்மைச்சுற்றிலுமுள்ள சகலப்பொருள்களையும் சுத்தமாகவைத்தும் அழுக்குகள் குவியவொட்டாமல்அப்போதைக்கப்போது அகற்றியும் இருள் அடையாமற்செய்தும் வரவேண்டும். இவைகளே அவற்றை விருத்தியாக வொட்டாமற்றடுத்து ஒழிப்பதற்கு உபாயங்களாகும். தேகாரோக்கியம் எய்துவதற்கும் சாதனமாகும்.

நாராயணதாஸன்.

ஐயவினா.

மச்சம், கூர்மம், வராகம், நாரசிம்மம், வாமனம் முதலிய அவதாரங்கள் உலகவிகாச முறையில் உருவங்கள் அடைந்திருக்கும் தேற்சி நிலையைக்காண்பிப்பதற்கு அறிகுறி யெனச் சொல்லப்படுகிறது. மேல்நாட்டுச் சாஸ்திர ஆராய்ச்சிக்காரர்களின் அபிப்பிராயமும் இதுவே. அப்படிக்கிருக்க இனிவரப்போவதாகியபத்தாவதான கல்கி அவதாரமோ குதிரை முகத்தோடுதிக்கப் போவதாகச் சொல்லப்படுகிறது. இஃதெவ்வாறு விகாச முறைக்குப் பொருந்தும்? அக்குதிரைமுகத்திற்கு வேறு குப்தமான பொருளிருக்குமாயின் அதனை நண்பர்கள் இப்பத்திரிகை வாயிலாக வெளியிடுவார்களென நம்புகிறேன்.

P. குமரப்பசெட்டி. F. T. S.,

ஆத்தங்குடி.

மதுரைச் சரித்திர ஆராய்ச்சி.

இராணி மங்கம்மாள்.

இவ்வுலகத்தி லிருந்த பல ஸ்திரீ ரத்நங்கள் வேறு வேறு காலங்களில் வெவ்வேறு நாடுகளிலிருந்து தங்கள் கீர்த்தியை நிலை நிறுத்தி யிருக்கிறார்கள். ஔவை, சாவித்ரீ, காரைக்காலம்மையார், தமிழறியும் பெருமாள் முதலியோர் தங்கள் கல்விச்சிறப்பினாலும், சந்திரமதி, தமயந்தி, அருந்ததி, சீதை, தாரை ஆதியர் ஒழுக்கத்தாலும், மங்கையர்க்கரசியார், Mrs அன்னிபெஸண்டு அம்மையார் ஆகிய இவர்கள் ஆத்மார்த்தத்திற்காகவே, தங்கள் வாழ் நாள் முழுதையும் செலவழித்த பெருமையாலும், மற்றும் ரொமேனியா நாட்டு இராணியாகிய எலிஜபெத் பிளாரன்ஸ் நைட்டிங் கேல், எலிஜபெத் ப்ரை (Elizabeth Fry) ஆகிய இன்னோர் பரோபகாரத்தையே தமது கடமையாகக் கொண்டு செய்தமையாலும், இன்னும் இங்கிலாந்து இராணி எலிஜபெத், மதுரை மங்கம்மாள் முதலானவர் பெருந்தேயங்களைச் சிறப்புடன் ஆண்டமையாலும் தத்தம் புகழைக் கன்மேலெழுத்தாக்கினர்.

ஒவ்வொருவரும் ஒவ்வொரு விஷயத்திற் சிறந்தவரென்றுகூறினதால் மற்ற குணங்கள் அவர்களிடத் தில்லை யென்று கொள்ளலாகாது. யாராரிடம் எவ்வெக் குணங்கள் பிறர் மிகுதியும் அறியும்படி தம்மை வெளிக் காட்டிக் கொண் டிருந்தனவோ அவற்றையே ஜனங்கள் மிகுதியும் பாராட்டுவர்.

இராணி மங்கம்மாளோ பலவிதங்களிலும் சிறப்புற்றுவிளங்கிய மன்னவியாதலின் அவளைப் பற்றி சில இங்கு எழுதுகிறோம். இவ்வரசி மதுரையைத் தலை நகராகக் கொண்ட பெருந் தேயத்தை ஆட்சி புரிந்தாள். மங்கம்மாள் என்ற பதத்திற்கு எவ்விதப்பொருளும் இருப்பதாய்த் தெரியாததால் இவள் பெயர் மங்களாம்பாள் என்று வைக்கப்பட்டு பின்னர் மங்கம்மாள் என்று மருவி யிருக்கவேண்டு மென்று தோன்றுகிறது.

இவ்வம்மாள் செய்த அழியாத தருமங்கள் மிகுதியும் பாராட்டத் தக்கன. இப்போதும் சாலைகளின் வழியே செல்பவர் "மகராசி மங்கம்மாள் போட்ட சாலையப்பா!" என்று சொல்வதைக் கேள்

விப்படுகிறோம். இவ்வரசியின் உருவப் படம் என்று சொல்லப் படுவதொன்று மதுரை மீனாக்ஷி யம்மன் கோயிலிலுள்ள பொற்றாமரைக் குளத்தின் மேற் புறத்திலும், ஊஞ்சல் மண்டபத்திற்குக் கீழ்ப் பாகத்திலுமுள்ள கல் மண்டபத்தில் தீட்டப்பட்டிருக்கிறது. இவ்வரசியின் கற்சிலை மாயவரம் கோயிலி லிருப்பதாகக் கேள்விப் பட்டிருக்கிறேன். தற்போது மதுரை ஜங்ஷனுக்கு எதிரிலுள்ள சத்திரமும், மதுரை சென்டரல் சந்தையு (Central Market)ம் இவ் வம்மாளின் ஞாபகார்த்தமாகச் சிறிது காலத்திற்கு முன்னர் கட்டப் பட்டன. இப்போது அந்திக் கடைப் பொட்டலுக்கு வடபா லுள்ள இராமநாதபுரம் கலெக்டர் கச்சேரியும், முற் கூறிய மார்க்கட்டும், மதுரைக் காலேஜ் மூன்றாவது பிரிவுப் பள்ளிக்கூடமும் அதன் வடபா லுள்ள ஆஸ்பத்திரி முதலியனவும் இவ் வரசியின் அரண்மனையின் பாகங்களென்றே தெரிய வருகிறது.

டெல்லியில் அக்பரும், இங்கிலாந்தில் எலிஜபெத்தும், அரசுபுரிந்த 100 வருஷங்களுக்குப் பின்னர் இவ்வம்மையார் நாயக்கதேச பரிபாலனம் செய்தாள். இவள் திருமலை நாயக்கரின் பேரனாகிய சொக்கநாத நாயக்கனின் காதலி. தன் பேரனுக்குத் தக்க பருவம் வருமளவும் இவள் நாட்டையாள வேண்டி வந்தது. இதன் விவரத்தைச் சற்று கூறுவாம்.

சொக்கநாத நாயக்கன் இறந்த பிற்பாடு அம்மன்னனின் குமாரனாகிய ரெங்க கிருஷ்ண முத்து வீரப்ப நாயக்கன் 7 வருஷம் ராஜ்ய பரிபாலனம் செய்தனன். பெரிய அம்மையின் உபத்திரவத்தால் திடீரென இவன் இறக்க, அவன் மனைவியாகிய முத்தம்மாள் உடன் கட்டை ஏற யத்தனித்தாள். ஆனால் அவளது மாமியாகிய மங்கம்மாளும், பல குடிகளும், இவளை எவ்வளவோ தடுக்க முயன்றும் இவள் தன் கருத்தைக் கடைப்பிடித்தே நின்றாள். அச்சமயம் இம் முத்தம்மாள் பூர்ண கர்ப்பவதியா யிருந்ததால் குழந்தை பேறுவரைக் கேனும் உயிர் தரித்திருக்குமாறு இவளை யாவரும் மன்றாட அவ்வாறே இவரும் ஒப்பினர்.

பிறகு ஓர் ஆண் குழந்தை பிறந்தது. உடனே அவள் தன் கோரிக்கையை நிறைவேற்றிக்கொள்ள யாவரிடமும் உத்திரவு கேட்

டாள். யார் தாம் இக் கொடிய செய்கைக் குடன்படுவார்கள். இன்றைக்கு நாளைக்கென்று எல்லாருமாக நாட்களைக் கழித்துக் கொண்டே வந்தார்கள். அவ் வுத்தமியாகிய முத்தம்மாள் எவர்க்குந் தெரியாமல் ஒரு நாள் பனி நீரைக் குடித்து விட்டாள். பிரசவித்தவர்களுக்குக் குளிர்ந்த பொருளைக் கொடுக்கக் கூடாதென்றே கஸ்தூரியைக் கொடுப்பார்கள். அவ்வாறிருக்க மிகக் குளிர்ந்த பனிநீரைக் குடித்தவள் பிழைப்பாளா! ஐயோ! பரிதாபம்!! கரு உயிர்த்த நான்காம் நாளே அவள் தன் கணவனின் கதியையடைந்தாள்.

அப்பால் பிறந்த குழந்தையாகிய விஜய ரங்க சொக்கநாதநாயக்கனுக்கு மூன்று மாதத்திலேயே பட்டஞ் சூட்டப்பட்டது. ஆயினும் அச்சிசுவால் எக்காரியமுஞ் செய்ய இயலாதாதலின் அதற்குப்பிரதியாய் இராணி மங்கம்மாள் 16வருடங்கள் (1689–1705) பரிபாலனம் செய்தாள். இராணி மங்கம்மாள் அரசியாயிருந்தகாலம் தேசத்திற்கு மிகுந்த நன்மையைத் தந்தது. அப்பொழுது இவ்வரசி செய்த நன்மைகளை நம்மால் எழுத முடியுமா? முடியாதாயினும் சிலவற்றைச் சொல்லுவோம். மதுரையி லிருந்து நான்கு பக்கங்களிலும் பிரிந்து செல்லும் ரஸ்தாக்களைப் போட்டு அவற்றின் நெடுக விருக்ஷங்களை வைக்கச் சொன்னாள். அப்பாலும் ஏற்பட்ட சாலைகளின் நெடுக ஜனங்களின் வசதிக்காக பல குளங்களையும் கிணறுகளையும் வெட்டுவித்தாள். அன்றியும் பல கோயில்களையும், அக்கிரகாரங்களையும், சத்திரங்களையும் கட்டுவித்தாள்.

இவ்வாறு அவள் எண்ணிறந்த தர்மங்கள் செய்ததற்குப் பலர் பல காரணங்கள் கூறுவார்கள். ஓர் நூலாசிரியர் அவைகளெல்லாம் அவளது இளமையின் கிறுக்கென்கிறார். இன்னொருவர் அவள் ஒரு நாள் வலதுகையால் பாக்கை வாயில் போட்டுக்கொள்வதற்குப் பதிலாய் இடது கையால் போட்டுக் கொண்டாளென்றும் அதனால் ஏற்பட்ட பாபத்தை நீக்கிக் கொள்வதற்காகவே இவ்வித தர்மங்களைச் செய்தனள் என்றும் எழுதுகிறார். மற்றொருவர் மங்கம்மாள் கூடாவொழுக்கத்தில் தலையிட்டா ளென்றும் அதனாலுண்டாகிய பாபத்தைத் தீர்த்துக் கொள்வதற்கு இவ்வாறு செய்தனள் என்றும் எழுதினர். ஆகா! பிறரின் நன்மைக்காகத் தன் உயிரைக் காத்திருந்த இவ்வரசியின் மேல் பழி பாவத்தைச் சுமத்தல் தர்மமாகுமா?

தானதர்மங்கள்செய்வதற்காக ஒரு நோக்கங்கற்பிக்கவும்வேண்டுமோ? தர்மஞ்செய்ய வேண்டியது தனது கடமை என்று எண்ணாமல் பிறர் புகழ்தற்காகவும் பிறர் அடிக்கடி தன்னிடம் வந்து செய்யும் ஹிம்சைக்காகவும் ஒருவன் ஏதேனும் செய்வானாயின் அது தர்மம் என்று சொல்லப்படமாட்டாது.

முன் ஒரு காலத்தில் தான் வரும் வழியில்கொழுக்கொம்பின்றியும் வெயிலால் வாடியும் படர்ந்திருந்த ஓர் முல்லைக்கொடியைப்பார்த்து அநுதாபித்து அதன் சமீபத்தில் தன் பொற்றேரை நிறுத்திவிட்டு காலால் வீட்டிற்குத் திரும்பினன். பாரிவள்ளல் என்பவன் என்றும், பேகன் என்னும் அரசன் ஒரு நாள் மலையைப் பார்க்கச் சென்றிருந்தபொழுது அங்கு ஒரு மயில் சிறகு விரித்து அகவ, அதனைக் கண்ட அரசன் அது குளிரால் வருந்துகின்றதென் றெண்ணி அதற்கு ஒப்பில்லாத ஓர் போர்வையைக் கொடுத்தானென்றும் நூல்களில் கூறப்பட்டிருக்கின்றது. குமண வள்ளல் தன்னிடம் இரக்க வந்த ஓர் புலவருக்குத் தன் உயிரைக்கொடுத்தேனும் அவரது வறுமைகளைக் களைய மன மகிழ்ச்சி கொண்டான். சிபிச் சக்கரவர்த்தி கேவலம் ஒரு புருவைக் காப்பாற்றற்காகத் தன் உயிரையும் விடத் துணிந்தான். இவர்கள் செய்ததற்கெல்லாம் காரணங்கள் யாவுள? ஆதலால் மங்கம்மாள் சாதாரண தருமங்கள் செய்தது காரணம் பற்றித்தானிருக்க வேண்டுமென்றெண்ணுவதிழுக்கு. அவள் செய்த காரியங்கள் அவள் புத்தியின் விசாலத்தையும் உண்மையான அரசியின் மேன்மையையும் எடுத்துக் காட்டவில்லையா?

இனி இவ்வரசியின் ஆட்சியைச் சிறிது கூறுவாம். அவள்காலத்தில் திருவாங்கூர் அரசன் அவளுக்குக் கொடுக்க வேண்டிய கப்பத்தைச் சிறிது காலமாய் நிறுத்தி வைத்திருந்தான். உடனே மங்கம்மாள் அவ்வரசனைக் கட்டாயப்படுத்திக் கப்பம் வாங்க ஒரு சிறு சேனையை அனுப்பினள். அவ்வரசன் நாயக்க சேனையின் உதவியால் தன்னோடு கலகம் செய்த தன் மந்திரிகளின் கொழுப்பை அடக்கினன். அது முடிந்ததும் நாயக்க சேனையை எதிர்த்து அதை நிர்மூலமாக்கினன். உயிர் தப்பிய இரண்டொருவர் மங்கம்மாளிடம்

வந்து செய்தியைத் தெரிவித்தார்கள். உடனே மங்கம்மாளுக்குண்டான கோபத்திற் களவுண்டோ? சிறிதும் தன் வலிமையை அறியாதும் தன்னை மதியாதும் தன் சேனைக்குத் தீங்கு இழைத்த அச்சிற்றரசனைத் தண்டித்தற்காக தன்மந்திரியும் தந்திரியுமாகிய நரசப்பையனை ஒரு பெருஞ் சேனையுடன் திருவாங்கூருக்கு அனுப்பினாள். இதனால் அவள் எதிரிகளை திருணமாய் எண்ணும் அஞ்சாத நெஞ்சுடையவள் என்று விளங்கவில்லையா?

நரசப்பையன் அங்குப்போய் அங்குள்ள சிற்றரசனைக் கண்டதும் அவனிடம் ஏராளமான பணத்தையும் நகைகளையும் துப்பாக்கிகளையும் வாங்கிக்கொண்டு மதுரைக்குத் திரும்பினான்.

வரும்பொருளுரைக்கும் திறமையுடையவன் எவனோ அவனே சிறந்த மந்திரி. அப்படிப்பட்ட அமைச்சனை எவ்வரசு தெரிந்திருக்கிறதோ அதுவே சிறந்ததும் பாக்கியமுள்ளதும் ஆகிய ராஜாங்கம் ஆகும். மங்கம்மாள் மிகச்சிறந்த புத்திசாலி யென்பது, அவள் தந்திரியும் மந்திரியுமாக நரசப்பையனைத் தெரிந்தெடுத்ததால் விளங்குகிறது. நரசப்பையனின் ஒரு தந்திரத்தைப் பாருங்கள்.

1700ல் தஞ்சை மகாராஷ்டிர மன்னருக்கும் நாயக்கர்களுக்கும் சண்டை உண்டாயிற்று. அப்போது இரண்டு சேனைகளும் காவேரி நதியின் தென் கரையிலிருந்து கொண்டு யுத்தத்தை ஆரம்பிக்க சமயம் எதிர் பார்த்துக் கொண்டிருந்தன. எதிரி சேனையின் பலம் அதிகமாக விருக்கு மென்று நரசப்பையனுக்குப் பட்டது. உடனே அவன் சமயோஜித யுக்தி யொன்று கண்டு பிடித்தான். அதாவது தான் தன் சேனைகளுடன் காவேரியைக் கடந்து சென்று தஞ்சையைப் பிடிப்பதாக பிரஸ்தாபப் படுத்தினான். உடனே எதிரிகள் தம் தலை நகரைக் காப்பதற்காக ஆற்றைக் கடந்தார்கள். நரசப்பையன் அது தான் தனக்கு ஏற்ற சமய மென்று எண்ணிக் கரையிலிருந்தபடியே எதிர் சேனையை நாசமாக்கி வெற்றியடைந்தான். இம்மந்திரியின் தந்திரத்தைப் பார்த்தீர்களா? நரசப்பையனை விரும்பாத ரோமன் காதலிக் பாதிரிகளுங் கூட அவனைப் போல மந்திரி நாயக்க அரசர்களுக்குள்ளாக வேறு எவ்வரசனுக்

ளும் கிடைத்ததில்லை யென்று எழுதியிருக்கிறார்கள். அப்படியா னால் இவ்வம்மைச்சனின் பெருமை அளத்தற் கரியதன்றோ?

பின்னர் தஞ்சை மன்னர் ஏராளமான பணச்செலவு செய்து சமாதானம் செய்துகொண்டார்.

இனி அரசியின் ராஜரீக தந்திரத்தைப் பார்ப்போம். ஓர் அர சன் மிகவும் வலியவனாக இருந்தால் அவன் தன்னினும் எளிய அர சனைத் தொந்தரை செய்யாமல் மங்கம்மாள் வலியற்றவனுக்கு உதவி செய்வாள். அதாவது மேல் நாட்டார் தற்காலத்தில் சிறந்த முறை யெனக் கைக்கொள்ளும் (Balance of power) என்னும் தந்திரத்தை அக்காலத்திலேயே அவள் கண்டு பிடித்திருந்தாள். இம்முறையை அநுசரிக்காவிட்டால் ஓர் வலிய அரசன் முதலில் மெலியோரை வென்று படிப்படியாய் எந்நாட்டையும் கைப்பற்றுவான்.

மைசூர் அரசன் காவேரியில் அணைகட்டி அதில் வரும் தண் ணீரைச் சரியாய் வரவொட்டாமற் றடுத்தான். அத்தண்ணீர் வரா ததால் திருச்சி தஞ்சையை யடுத்த நிலங்கள் தரிசாகக்கிடக்க நேர் ந்தது. ஆதலால் மங்கம்மாள் தனக்குச் சிறிது காலத்திற்கு முன் னர் விரோதியா யிருந்த தஞ்சை மன்னனுடன் சேர்ந்து கொண்டு மைசூரை எதிர்க்கத் தயாராய் இருந்தாள். அச்சமரைத் தொடங்கு முன் நதியிற் கட்டப்பட்ட அணை வெள்ளத்தாற் கொண்டுபோகப் பட்டது.

இதற்கு மறுவருஷம் அமாத்ய சிரேஷ்டனாகிய நரசப் பையன் இராமநாதபுரம் சேதுபதியுடன் சண்டை செய்கையில் தனது சாவா கிய பெரும் நஷ்டத்தை நாட்டிற்குண்டாக்கினான்.

முடிவாக இவ்வுத்தமியின் பிற்கால ஜீவியத்தையும் கற்பு நிலை யையும் பற்றிக் கூறி விஷயத்தை முடித்து விடுவோம். 1704 ஆவ தன் பேரனுக்குத் தக்க பருவம் வந்ததும், ராஜாங்கத்தை அவனி டம் ஒப்புவித்து விட்டு, மங்கம்மாள் திருச்சியினின்று மதுரைக்கு வந்து அங்குள்ள தனது சொந்த அரண்மனையில் வசித்தாள்.

ஆனால் இதைப்பற்றி நூலாசிரியராகிய நெல்சன் துரை அவர் கள் வேறு அபிப்பிராயம் கொண்டுளார். அதாவது நரசப்பையனு

க்குப் பின் மந்திரியாயிருந்த அச்சையாவை அவள் காதலித்தாளாம். நாட்டைத் தன் பேரனுக்குக் கொடுக்க மறுத்தாளாம். அதற்காக ஜனங்கள் ஒன்றுகூடி அவளைக் கைதியாக்கி மதுரைக்குக் கொண்டு வந்து சிறையில் வைத்ததோடு நில்லாமல் அவளுக்குச் சோறும் போடாமலிருந்தார்களாம். மங்கம்மாளோ பசிக்கு அன்னமில்லாமலும் உடல் காய வருந்தி உயிர்துறந்தனளாம்.

முதற்கூறியபடி அரசி கற்புநிலையில் தவறியவள் என்பதற்குத் துரையவர்கள் சில காரணங்களும் கற்பித்தனர். பொற்றாமரைக் கரை மண்டபத்தில் மங்கம்மாளின் படம் எழுதப்பட்டிருக்கிற விடத்து அவள் மந்திரியின் உருவமும் எழுதப்பட்டிருப்பதும் மந்திரியின் சிலையென்று சொல்லப்படும் ஓர் பிம்பம் அங்கு நிற்பதுவும் ஒரு காரணம். படத்தால் மங்கம்மாள் கைம்பெண் உடையன்றி சிறந்த ஆடையாபரணங் கொண்டிருந்தாள் எனக்குத் தெரிவதுபிறிதொரு முகாந்திரம். தன் கணவனுடன் உடன் கட்டை யேறாதது மற்றொரு ஏது. இனி இதன் உண்மையை ஆராய்வோம்.

ஜனங்கள் பாரம்பரியாய்ச் சொல்வதைத் தவிர தமது கொள்கைக்கு வேறு ஆதாரங்கள் இல்லையெனத் துரையவர்களே எழுதியிருக்கிறார்கள். நேற்று நடந்ததொரு விஷயத்தையே இன்று பலர் தங்களால் தங்களுக்குத் தோற்றியபடி கைச்சரக்கேற்றித் தம் வாயில் வந்ததெல்லாம் வெவ்வேறு விதமாய்ச் சொல்லுகின்றனர். அவ்வாறாக மங்கம்மாளுக்கு சுமார் 175 வருடங்களுக்குப் பின் உள்ளோர் சொல்வதை நம்புவது சரியா? மேலும் சரித்திர ஆராய்ச்சிக்காரர் தகுந்த ஆதாரங்களுடன் ஓர்விஷயத்தை நிரூபிக்கவேண்டுமேயன்றி ஆதாரமில்லாமல் தங்கள் கைக்கு வந்தபடி எழுதிவைப்பதுசரியாமா? முதலாவது மங்கம்மாளும் அவள் மந்திரியுமாகிய இருவர் உருவமும் ஒரே இடத்தில் இருத்தல் முற்கூறிப சந்தேகத்திற்கிடமாகிறதென்றார். ஒரு ஸ்திரீ புருஷனல்லாத மற்றொரு ஆடவன் கையையும் ஒரு ஆடவன் தன் மனைவியல்லாத இன்னொரு *பெண்ணின் கையை

---

* இத்தன்மைய மேனாட்டாரின் நாகரிகம் சிறந்ததென்றாவது அல்லது சிறந்தது அன்றென்றாவது எண்ணி இவ்விஷயத்தை இங்கு எழுதவில்லை என்றறிக.

யும் பிடித்துக் குலுக்கிக் கொள்ளும் நாகரிகமுள்ள மேனாட்டாரைச் சேர்ந்த துரையவர்கள் முற்கூறியபடி இருவர் படமும் ஒரே இடத்தில் எழுதப்பட்டிருப்பது கற்பில் வழுவினதற்குக் காரணமென்பது மிக விந்தையினும் விந்தையே. நிற்க.

முன்னிற் கூறிய படங்கள் மங்கம்மாள் காலத்திற்முன் எழுதப்பட்டன என்பதற்கும் அவ்வுருவம் அவற்றால் குறிக்கப்படும் ஆட்களைத் தாம் தெரிவிக்கு மென்பதற்கும் என்ன ஆதாரமிருக்கின்றது? நரசப்பையனின் பின் மந்திரியாயிருந்த அச்சையனை அரசி காதலித்தாள் என்றார். படத்தில் மந்திரியின் பெயர் தளவாய் ராமப்பையன் என்று எழுதப்பட்டிருக்கிறதே யன்றி அச்சையன் என்று காணப்படவில்லை. மேலும் அங்கு எழுதப்பட்டுள்ள படங்களைப் பார்த்தால் அவைகள் பொற்றாமரைக் கரையை அடுத்தசுவர்களிலும் பிராகாரங்களிலும் எழுதப்பட்டிருக்கும் படங்களை முற்றிலும் ஒத்திருக்கின்றன வென்பது தெளிவாய்ப் புலப்படுகின்றது.

இனித் துரையவர்களின் அபிப்பிராயப்படி அப்படங்கள் அவைகளால் குறிக்கப்படும் ஆட்களையே தெரிவிப்பனவாய் வைத்துக்கொள்ளுவோம். அவ்வாறு செய்யினும் அரசி கைம்பெண்ணுடை தரியாமல் உயர்ந்த ஆடையாபரணங்களை அணிந்திருப்பது துரையவர்களின் அபிப்பிராயத்திற்கு அநுகூலமா யில்லை. நம் நாட்டாரின் நடையுடைகளையும் வழக்கங்களையும் ஆராய்ந்தறியாது அவர்களிவ்வாறு எழுதினார்களென்பதிற் றடையில்லை. ஏனெனில், பிராமணப் பெண்கள் தாம் தமது கைம்பெண்மைக்கு ஏற்ப சிறந்த ஆடை ஆபரணங்களை நீக்கி இருப்பார்களே யன்றி மற்றவர்கள் பெரும்பாலும் அவ்வாறிரார். அதிலும் நாயக்கக் கைம்பெண்கள் திருசூர்ணமுமிடுவார்கள். தாம்பூலமும் தரிப்பார்கள். ஆனால் விதவை என்பதற்குத் தாலி யில்லாமையே அறிகுறியாம். இவ்வாறிருக்க சிறந்த ஆடைஆபரணங்களை மங்கம்மாள் அணிந்திருந்தது சகஜமேயன்றோ? குடிக்கும் கஞ்சிக்குங் கூட விதியற்ற ஏழைகள் வீட்டு விதவைகளே மிக நல்ல ஆடை ஆபரணங்கள் புனையும் பொழுது ஓர் பெரிய ராஜஸ்திரீயாகிய மங்கம்மாள் நல்லாடை யணிந்தது வியப்பல்லவே.

தன் கணவனுடன் இராணி உடன் கட்டை ஏருத தன்மையை துரைபவர்கள் தமது கொள்கைக்கு ஓர் ஆதாரமாக்கு கின்றார். உடன்கட்டை ஏற வேண்டுமென்பது கட்டாயமல்ல. முற்காலத்தில் தசரதனுடைய மரணத்துக்குப் பிறகு அவனுடைய பட்டமஹிஷிகள் உயிருடனிருந்ததாக நாம் சரித்திர பூர்வமாய்க் காண்கின்றோம். அன்றியும் அக்பர் கால முதல் சதி (Suttie) நிறுத்தப்பட்டு வந்ததால் அச்சீர் திருத்தம் மெல்ல மெல்லத் தென்னாட்டிலும் பரவியிருக்கலாம். அல்லது தன் புத்திரன் மிகவும் இளைஞனாயிருந்தபடியால் அவனுக்காகவும் உயிரோடிருந்திருக்கலாம். இன்றேல், உடன்கட்டை ஏருதிருந்தால் தன்னைப் பின் பற்றிய தன் பிரஜைகளும் அவ்வாறே தன்னைப் போலச் சுகமடையலாம் எனக்கருதியும் நமது இராணியார் அவ்வாறு ஏருதிருக்கலாம். இன்னுமிவை போன்ற கணக்கில்லாத காரணங்கள் கூறலாம். விரித்துக் கொண்டே செல்லின் பெருகுமாதலின் இம்மட்டோடு இதனை நிறுத்திக் கொள்வோம்.

இறுதியாக துரையவர்களின் அபிப்பிராயத்தை மறுக்கத்தக்க மற்றொரு சிறந்த காரணமுமுண்டு. மங்கம்மாளின் நடத்தைப் பிசகைப் பற்றித்துரையவர்கள் கூறுங்கால்அவளுக்குச்சுமார் 56வருஷங்கள் இருக்கும். அஃதெவ்வாறெனின், சொக்கநாத நாயக்கன் பட்டத்திற்கு வந்தது கி. பி. 1662. மங்கம்மாளிறந்த வருஷம் கி. பி. 1705. இவற்றிற் கிடையிலுள்ள காலம் 43 வருஷங்கள். சொக்கநாத நாயக்கன் கி. பி. 1682 ம் ஆ இறந்ததும் அவனுடையகுமாரன் இரங்க கிருஷ்ண முத்து வீரப்ப நாயக்கன் உடனே பட்டத்திற்குவந்ததாய்ச் சொல்லப்படுவதில் அக்காலத்தில் அவனுக்குக்குறைந்தது 15 அல்லது 16 வயது இருக்கவேண்டும். ஏனெனில், அவன் பட்டத்திற்கு வந்ததும் போர்க்குப் புறப்பட்டதாய்ச்சொல்லப்பட்டிருக்கிறது. இவ்வரலாற்றை துரையவர்களும் தமது நூலில் கூறினர். இதனால் அவ்வரசன் பிறந்த வருஷம் 1667 கி. பி. என்றுதெரிகிறது. நாயக்க ஸ்திரீகள் பருவமடைந்த பின்னரே மணமுடித்தல் இயல்பு. 1667 கி. பி. க்கு இரண்டு வருடங்கட்கு முன்னர் மங்கம்மாளுக்குக் கல்யாணம் நடந்ததாய் வைத்துக் கொண்டால் அப்பொழுதவளுக்

குக் குறைந்த பக்ஷம் 16 பருவ மிருக்கலாம். இவ்வரலாற்ருல் அர சியின் மரணகாலத்தில் குறைந்தது அவளுக்கு (43+13)=56 வய திற்கு மோசமே இல்லை. சாதாரணமாய் ஸ்திரீகளுக்கு 40 அல்லது 45 வயதளவு மட்டுமே இவ்வுலக இன்பங்களிற் பற்றுதலிருக்குமே யன்றி 50 வருஷங்களுக்கு மேல் அஃதிருக்குமென்று சொல்வது நகைப்பிற் கிடமா யிருக்கிறது.

தன் பிரஜைகளுக்கு மஹோபகாரியா யிருந்து தன்னுட் டிற்கு நன்மை மிகும்படி அநேக சிறந்த சீர் திருத்தங்களைச் செய்த நமது இராணியாரின் தன்மை எவ்வளவு மெச்சிப்பாராட்டத்தக்கது! அவளது மனவலியும், ராஜாங்க தந்திரமும் புத்திக் கூர்மையும எத் துணை சிறந்தவை. பேர்பெற்ற திருமலைநாயக்கனும் தனக்குவேண்டி ய கட்டிடங்களை முடித்துக் கொண்டனனே யன்றி இவ்வரசியினைப் போன்று அவ்வளவு அதிக நன்மைகளைத் தேசத்தின் நன்மையின் பொருட்டுச் செய்தனனில்லனே. இவ்வாருப காரணங்களால் இவ ளே நாயக்க ராஜ வம்சத்தில் சிறந்தவளென்று சொல்லத் தடையு ண்டோ? இம்மஹோத்தமியைப் போன்ற கற்பிற் சிறந்த பெண்ணரசி களை நாம் எப்போதும் வாழ்த்துவோமாக.

தெ. ரா. சுப்பிரமணிய சர்மா,
தமிழ்ப்பண்டிதர்,
பசுமலை உயர்தர கலாசாலை.

நன்மொழி.

பலதுளி பெருவெள்ளம் என்றபடி ஏதேனும் ஒரு ஸத்காரியத்திற்கு நம் மாலியன்றவுதவி அற்பமாயினும், அவ்வற்ப வுதவிகளாக அநேகர் செய்துவர, அந்த நல்ல காரியம் நன்ருய் நிறைவேறும் என்பதில் ஸந்தேகம் இல்லை.

நீ உன் வாழ்நாளில் எவரெவர்களுக்கு அன்னமிடுகின்ருயோ, அவர்களெ ல்லாரும் நீ இறந்த பிறகு உன் பெயரை அடிக்கடி சொல்லி உன்னை என்றெ ன்றும் சிந்திப்பார்கள்.

புத்தக வரவு.

சங்கர சுந்தரி:—இப்பெயர்பூண்ட தமிழ்க்கதையில், நம்முடைய முன்னோர்கள் காலத்தில் விவாஹம் செய்வதானால் வதூவரர்களுடைய வயது சௌந்தரியம் ஆரோக்யம் கல்வி குணம் சீலம் குலம் முதலானவைகளைக் கவனித்து ஸமமானசம்பந்தமாகச் செய்துவந்ததுபோலல்லாமல், சென்ற சில வருஷங்களாக வரசுல்கம் அதாவது எதிர் ஜாமீன் வாங்குகிறது என்று நமக்குள் நூதனமாகவும் சாஸ்திர விரோதமாகவும் ஏற்பட்டிருக்கும் கொடிய வழக்கத்தைப் பற்றியும், கலியாண தரகர்களால் பெண்களைப் பெற்றவர்கள்படும் கஷ்டநஷ்டங்களைப் பற்றியும் ஏலத்தில் உயர்ந்த தொகைகொடுக்க சக்தியில்லாமலோ பெண் ருதுவாகு முன் விவாஹம் செய்தாக வேண்டுமென்ற நிர்ப்பந்தத்தாலோ பெற்றோர்கள் தங்கள் பெண்களை தாரமிருக்கத்தாரமாகவும், வயதுசென்றகிழவர்களுக்கும் நோயாளிகளுக்கும்குடும்பபாரணம் செய்யச் சக்தியற்ற ஏழைகளுக்கும் படிக்காதவர்களுக்கும் குரூபிகளுக்கும் விவாஹம் செய்துகொடுக்கும்படி ஏற்படுவதைப்பற்றியும், பிற்பாடு அந்தப் பெண்கள் அதிருப்தி யடைந்து தங்கள் புருஷர்களுடன் அநுகூலமாயிருந்து ஒற்றுவாழாமல் விடர்களுடைய வலையில் சிக்கி நலங்கெட்டுப் போகிறார்கள் என்பதைப் பற்றியும் நன்றாய் எடுத்துக் காட்டப்பட்டிருக்கிறது. அந்தக் கதையை வாசிப்பவர்கள் மேலே கண்ட கொடிய வழக்கத்தாலுண்டாகும் கெடுதிகளை நன்குணர்ந்து அந்த வழக்கத்தை மாற்ற முயலுவார்கள் என்பதில் சிறிதும் சந்தேகமில்லை. இப்புத்தகத்தின் விலை அணா 12. வேண்டுவோர் மகா-ள-ள-ஸ்ரீ T. V. அய்யாஸாமி ஐயர், தமிழ்ப் பண்டிதர் கண்டிராக்டர், வெள்ளியம்பலத் தெரு, மதுரை என்ற விலாசத்திற்கெழுதிப் பெற்றுக்கொள்ளலாம். (வி. விசுவநாதையர்)

சமாசாரம்.

ரணவைத்திய சிரோமணி:—நம்முடைய பிரிய ஸகோதரரான ரவீந்திரநாத்டாகோர் என்பவர் கீதாஞ்ஜலி என்னும் ஒரு அருமையான புத்தகம் எழுதியதற்காக அவருக்கு மேல்நாட்டில் லட்சத்து இருபதினாயிரம் ரூபாய் பரிசாகக் கொடுக்கப்பட்டதென்பதையும் அந்தப் பரிசானது நோபெல் என்னும் மகா புருஷனால் தான் கோடிக்கணக்காய் சம்பாதித்த பொருளனைத்தையும் மூலதனமாகவைத்து அதன் வரும்படியிலிருந்து 6 லட்சம் ரூபாயை உலகத்து ஜனங்கள் உயர்நலம்பெறக்கூடிய அறிவைப் பயக்கும் புத்திமான்களுக்கு ஜாதிமத வித்தியாசமன்றி வருஷம் ஒன்றிற்கு ஐந்து பரிசுகள் வீதம் கொடுத்துவரும்படி ஏற்பாடு செய்திருக்கிறார் என்பதையும் நாம் எல்லோரும் அறிவோம். அப்படி 1912 ம் வருஷத்தில் கொடுக்கப்பட்ட ஐந்து பரிசில் ஒன்று டாக்டர் காரெல் என்னும் அமெரிக்காதேசத்து ரணவைத்தியருக்குக் கொடுக்கப்பட்டது. அவர் இனிது 1914 ம் வருஷம் ஏப்பிரல் மாசம் 10உ ஐரோப்பா முதலான பல இடங்களிலிருந்தும் வந்திருந்து அமெரிக்காவில் கூடின சிறந்த ரணவை

த்தியர்களின் (American Surgical Association) கூட்டத்தில், மனிதனுடைய ஹிருதயத்தில் உண்டாகும் நோய்களை மற்ற அவயவங்களைப் போல் கையாடி சிகித்ஸை செய்து சௌக்கியப்படுவது சாத்தியமல்லவென்று வைத்தியர்கள் நினைத்திருப்பது பிசகு என்றும் அது சாத்தியம் என்றும் பிரஸங்கம் செய்து அது எப்படி சாத்தியமாகும் என்னும் வழியை அந்தக் கூட்டத்திலேயே ஒரு நாயினிடம் பிரயோகித்து நிரூபித்துக் காட்டினராம்.

ஹ்ருதயம் என்பது மனிதனுக்கு ஜீவாதாரம் ஆனபடியாலும், இடைவிடாமல் தேகத்தின் பல பாகங்களிலிருந்தும் அசுத்தமான ரத்தத்தை வாங்கிக்கொண்டு அதைச் சுவாசப் பையினிடம் சுத்தப்படுத்தி, சுத்த ரத்தத்தை சரீரத்திலுள்ள எல்லா அவயவங்களுக்கும் இறைத்துக் கொண்டேயிருப்பதாலும், அதை ஒருக்ஷணமாவது வேலை செய்யாமல் நிறுத்தினால் உயிர் நீங்கிவிடுமென்று நினைத்திருந்தார்கள். உலகத்தில் ஹிருதய சம்பந்தமான நோய்களுக்கு (Heart disease) யாதொரு சிகித்ஸையுமில்லாமல் மனிதர்கள் லக்ஷக்கணக்காய் மாண்டுபோவதை உத்தேசித்து டாக்டர் காரெல் என்பவர் நாயின்பேரில் பரீக்ஷை செய்துபார்த்து இரண்டரை நிமிஷம்வரை ஹிருதயத்தின் வேலையை நிறுத்திவைப்பதனால் ஜீவஹானி ஏற்படவில்லை என்றும், அந்த இரண்டரை நிமிஷத்துக்குள் வேண்டிய சிகித்ஸைகள் எல்லாம் செய்வதற்கு போதுமான ஸாவகாச மிருக்கிறதென்றும் கண்டுபிடித்தார். அந்தப்படியே அங்கே கூடியிருக்கும் வைத்தியர்கள் முன்னிலையில் ஒரு நாயைக்கொண்டுவந்து அதன் இருதயத்தைக் கத்தியால் திறந்து அதில் வந்து சேருவதும் அதிலிருந்து வெளியே போவதுமான சுமார் 12 ரத்தக்குழாய்களையும் 12பிடிப்புகளால் கவ்வச்செய்து ஹிருதயத்தின் வேலையை நிறுத்தி இரண்டரை நிமிஷத்துக்குள் அதன் ஹிருதயத்துக்குள் பல சிகித்ஸைகள் செய்து தைத்து முடிந்தபின் பிடிப்புகளை எடுத்துவிட்டு ரத்தக்குழாய்களை எப்போதும்போலத் திறந்துவிட்டாராம். அந்த நாய் சாகவில்லையாம். அங்கேகூடியிருந்த அவ்வளவு ரண வைத்தியர்களும் மனிதர்களுக்கு நேரும் ஹிருதயஸம்பந்தமான நோய்களிலும் இவ்விதமான சிகித்ஸை சாத்தியம் என்பதை நிதர்சனமாகத் தெரிந்துகொண்டார்களாம். டாக்டர் காரெல் நெடுங்காலம் வாழ்வாராக.

திருப்பாப்புலியூரில் (Cuddalore Old Town) இருக்கும் பிரஹ்மக்ஞான சபையின் காரியதரிசி P. L. ஜேவிங் என்பவர் ஷை சபைக்கு ஒரு கட்டிடம் கட்ட சுமார் 4000 ரூ. பிடிக்கக்கூடியதாயிருக்கிறதென்றும் அதற்காக எல்லோரும் தங்களால் இயன்றமட்டும் ஸ்வல்பமாயிருந்தாலும் கொடுத்துப் பொருளுதவி செய்யவேண்டுமென்றும் விக்ஞாபனஞ் செய்திருக்கிறார்.

பம்பாயிலுள்ள (Wadia) தர்மவிசாரணை டிரஸ்டிகளுடைய வருஷாந்தரக் கூட்டம் நடந்தேறியது. அதில் பம்பாய் ஹைக்கோர்டு தலைமை ஜட்ஜியாகிய ஸர் பேஸில் ஸ்காட் என்பவர் அக்கிராஸனம் வகித்தார்கள். அந்த டிரஸ்டுச்கு ஏற்படுத்தியிருக்கும் மூலதனத்தின் வரும்படியிலிருந்து மட்டும் சென்ற 4 வருஷங்களுக்குள் 14 லக்ஷம் ரூபாய் வரை தருமத்துக்குச் செலவாகியிருப்பதாக வெளியாகிறது. அதில் கவனிக்கவேண்டிய முக்கியமான விஷயங்களென்னவென்ருல், ஷ தருமத்தை ஸ்தாபித்தவர் பார்ஸி மதஸ்தராயிருந்தபோதிலும் அந்தத் தர்மத்தின் பிரயோஜனத்தை பார்ஸி மதஸ்தர்கள்தான் அடையவேண்டியதென்ருவது இந்தியர்கள்தான் அடையவேண்டியதென்ருவது வரம்பு ஏற்படுத்தாமல் விசாலமான மனதுடன் ஸர்வ மதஸ்தர்களுடையவும் ஸகல தேசத்தவர்களுடையவும் பொதுநன்மையை உத்தேசித்து ஏற்படுத்தியிருக்கிருரென்பதேயாம்.

கடைசியில் எடுத்த ஜனக்கணிதத்தை (Census Report) பார்க்குமளவில் சென்ற 30 வருஷங்களுக்குள் ஹிந்துக்களின் ஜனத்தொகை 100க்கு 15 தான் விருத்தியடைந்திருக்கிறதென்றும், மகமதியர்களின் ஜனத்தொகை 100 க்கு 30 விருத்தியாயிருக்கிறதென்றும் கிறிஸ்தவர்களின் ஜனத்தொகை 100 க்கு 108 விருத்தியடைந்திருக்கிறதென்றும் தெரியவருகிறது. கிறிஸ்தவர்களின் ஜனத்தொகை நிரம்பவும் விருத்தியடைந்திருப்பதற்குக் காரணம் ஹிந்துக்கள் பஞ்சமர்களைச் சரியானபடி ஆதரிக்காதபடியால் அவர்களில் அநேகர் மிஷனரிகளுடைய போதனைக்குட்பட்டு ஹிந்துமதத்தைவிட்டு கிறிஸ்தவமதத்தில் போய்ச்சேர்வதே முக்கியமான காரணம். ஆனல் மகமதியர்களுடைய ஜனத்தொகையின் விருத்திக்கும் ஹிந்துக்களின் ஜனத்தொகைக் குறைவுக்குங் காரணம் ஹிந்துக்களுள் வழங்கிவருகிற பாலியவிவாஹத்தைத் தவிர வேறில்லை. ஆகையால் ஹிந்துக்கள் இனிமேலாவது பஞ்சமர்களை அன்புடன் ஆதரித்து உயர்நலம் அடையச்செய்து, பாலியவிவாஹம் என்னும் துர்வழக்கத்தையும் மாற்ற முயலுவார்களாகில் மேன்மேலும் விருத்தியடைவார்கள்.

வருகிற ஏழு வருஷங்களுக்கு பிரஹ்மஞான சபைக்கு பிரஸிடெண்டு நியமிக்கவேண்டிய விஷயமாய் (British Section) லிருந்து 2283 (Voting Paper) அனுப்பித்ததாயும் அதில் 1512 பேர்களுடைய பேபர்கள் மட்டிலும் திரும்பி வந்திருப்பதாயும் அதில் 1501 பேர்கள் மாதுஸ்ரீ அந்நிபெஸண்டு அம்மையாருக்கு அனுகூலமாய் வோட் கொடுத்திருப்பதாயும் 9 பேர்கள்மாத்திரம் பிரதிகூலமாய் வோட் கொடுத்திருப்பதாயும் 2பேர்களுடைய வோட் செல்லாமல் போய்விட்டதென்றும் இன்னும் 776 பேர்கள் (Voting

Paper)களை திருப்பி அனுப்பவில்லை யென்றும் 'வர்ஹன்' என்னும் பத்திரிகையால் வெளியாகிறது. இந்திய மெம்பர்களில் யாராவது இதுவரை வோடிங் பேபர்களை திருப்பி அனுப்பாத பக்ஷத்தில் உடனே அவர்களுடைய அபிப்பிராயத்தைக் கண்டெழுதி கையெழுத்துப்போட்டு அனுப்பிவிடவேண்டும்

புதிதாம் ஏற்பட்ட கிளைச்சபைகள்:—

1. ஆத்தங்குடியில் 7 புது மெம்பர்களும் 2 பழைய மெம்பர்களும் சேர்ந்து 11—3—14 ல் உண்டான கிளைச்சபை.

2. சத்திரப்பூரில் 7 புது மெம்பர்கள் சேர்ந்து 9-2-14 ல் உண்டான கிளைச்சபை.

3. கடம்பூரில் 5 புது மெம்பர்களும் 4 பழைய மெம்பர்களும் சேர்ந்து 18—2—14 ல் உண்டான கிளைச்சபை.

4. நல்லல் கொண்டாவில் 12 புதுமெம்பர்கள் சேர்ந்து 25—2—14 ல் உண்டான கிளைச்சபை.

1914ளு மார்ச்சுமீ 31வயோடு முடிவாகிற மூன்று மாசங்களில் புதிதாய்ச் சேர்ந்த மெம்பர்கள் 218.

வி. விசுவநாதையர்.

நன்மொழி.

ஸத்யம் என்னும் விளக்கு நம் ஒவ்வொருவரின் அந்தக்கரணத்திலும் அமைந்துளது. சிற்சில சமயங்களில், சிற்சில சந்தர்ப்பங்களில் தான் ஈசுவர புத்ரன் அவ் விளக்கை ஏற்றி ஞான வெளிச்சத்தை யருளுகிறான்.

உலகத்தில் சிறந்த அறிவாளிகள் இருக்கும்போதே தன் அறிவின்மையைத் தெரிந்து கொள்ளாத ஒருவன் அப்படிப்பட்ட மஹான்கள் விலகியபோது அதாவது அறிவுக்கு லோபம் வந்த காலத்தில், ஒருபொழுதும் தம் அறிவின்மையைத் தெரிந்து கொள்ளமாட்டான். அதாவது அப்படிப்பட்ட அறிவிற் சிறந்த மஹான்கள் இருந்த காலத்தும் தன்னை அவர்களிலும் மிக்க அறிவுடையோனாக நினைத்த ஒருவன் அவர்களில்லாத காலத்தில் தம் அறிவின்மையைத் தெரிந்து கொள்வது அஸாத்தியம் என்பதாம்.